# ஆறுகள் பின்னோக்கிப் பாய்வ...





முரசொலி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுகள் பின்நோக்கிப் பாய்வதில்லை

கே. ஆர். டேவிட்

முரசொலி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரசொலி வெளியீடு

முதற் பதிப்பு
மே, 1987

விலை ரூபா 10/-

நூலாசிரியர்
கே. ஆர். டேவிட்
பிடாரிகோவில் வீதி
ஆனைக்கோட்டை

அட்டைப்படம்
லங்கா

அச்சுப்பதிவு
முரசொலி அழுத்தகம்
ஆர். ஜி. பில்டிங்
ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

பத்திரிகைகள் வெறுமனே செய்திகளை மட்டும் வெளியிடு பவைகளாக அல்லாமல், அந்த நாட்டினதும், இனத்தினதும் இலக்கிய வரலாற்றுப்படைப்புகளின் களமாகவும் அமைய வேண்டியது அவசியமாகும். இது காலத்தின் தேவையும் கூட.

தினசரி செய்திகளை வழங்கி, வார இறுதியில் மட்டும் இலக்கிய அம்சங்களைக் கொண்டதான வெளியீட்டை வாசகர்களுக்கு வழங்குவதைப் பத்திரிகைகள் மரபாகக் கொண்டுள்ளன.

இதனிலிருந்து கொஞ்சம் வேறுபட்டு தினசரிப் பத்திரிகையிலும் குறுநாவலொன்றை வெளியிட்டு முரசொலி 'பரிசோதனை' செய்து பார்த்தது.

திரு. கே. ஆர். டேவிட்டின் இக் குறுநாவல் வாசகர்களி டையே நல்ல வரவேற்பைப் பெற்றது. இதனால் திரு. டேவிட் அவர்களின் குறுநாவலை நூலாக வெளியிடத் தீர்மானித்தோம்.

முரசொலியின் இலக்கிய வெளியீட்டு வரிசையில் 'ஆறுகள் பின் நோக்கிப்பாய்வதில்லை' என்ற குறுநாவலும் எமது வாச கர் முன் வைக்கப்படுகின்றது.

நீங்கள் அளிக்கும் ஆதரவு, மேலும் பல முரசொலி வெளி யீடுகளை வெளிக்கொணர ஊக்கமும் உற்சாகமுமளிக்குமென்ற நம்பிக்கை எமக்குண்டு.

ம. சிவராசா
ஆளுநர் நாயகம்
28 . 4 . 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளியீட்டுக் குறிப்பு

மலையகத்தின் புரட்சிப்பெண்ணான இளநங்கை குருவம்மா என் மனக்கண் முன்னால் இன்றும் நிற்கின்றாள்.

தனது தாயையும், அக்காளையும் இழந்து, உற்றார் உறவினரைத் துறந்து நீதிக்காக கொலைகாரியாக மாறிய குருவம்மாவை, என் மனதில் பசுமரத்தாணியாக இருக்கச் செய்தவர் திரு. கே. ஆர். டேவிட்.

சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னர் திரு. டேவிட் எழுதிய ''வரலாறு அவளைத் தோற்றுவிட்டது'' என்ற நாவலின் அச்சாணி இந்தக் குருவம்மாதான்.

நாவலாக இருந்தாலென்ன, குறுநாவலாக இருந்தாலென்ன, சிறுகதையாக இருந்தாலென்ன, ஒரு பிரதான பாத்திரத்தை உருவாக்கி, அதற்கு உயிர் கொடுத்து, அதனைச் சுற்றியே கதையைப் பின்னிப்பிணைத்துச் செல்வது திரு. டேவிட் அவர்களின் படைப்புக்களில் நான் கண்ட சிறப்பம்சம்.

அங்கே ஒரு குருவம்மாவைத் தோற்றுவித்ததுபோல, இந்நாவலில் செல்லப்பரை அவர் உருவாக்கியுள்ளார்.

இக்குறுநாவல் முரசொலியில் தினசரி தொடராக வெளிவந்த வேளையில், பலரது வீட்டிலும், ரோட்டிலும் 'செல்லப்பர்' நடமாடும் பாத்திரமாக திகழ்ந்தமை திரு. டேவிட் அவர்களின் பேனாவுக்குக் கிடைத்த பெரு வெற்றி.

நிகழ்காலப் போராட்ட வரலாற்றின் முக்கிய கட்டத்தினைப் படம் பிடித்துக்காட்டும் இக் குறுநாவலை, முரசொலி வெளியீடாக மக்கள் பீடத்தில் வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

**எஸ். திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர்
முரசொலி/ வார முரசொலி
28.4.1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு வருடச் சிறைவாழ்க்கை......

பப்பாசி மரத்திலுள்ள 'கப்பிக்காய்கள்' வெம்பிப் பழுத்து- நிலத்தில் விழுந்து- சிதறிப் போவது போல்...

கப்பிக்காய்களாகி விட்ட அந்த எட்டு வருடங்களை இரைமீட்புச் செய்கிறார் செல்லப்பா...

ஒளிபட்ட 'பிலிம் ரோலில்' இடையிடையே கறுப்புப்புள்ளிகள் தெரிவதைப் போன்று... எட்டு வருட வாழ்க்கைத் தொடரில், ஏதோ சில சம்பவங்கள் அங்கவீனர்களைப் போல் தெரிகின்றன...!

எட்டு வருடங்கள்......

நாட்கணக்கில் பார்த்தால் எத்தனையாயிரம் நாட்கள் நாசமாகிவிட்டன...!

நாசமாகிவிட்டதல்ல; சட்டத்தினால் கரைக்கப்பட்ட நாட்கள்...!

கரைந்துபோன எட்டு வருடங்களிலும் அவன் சந்தித்தவர்கள்... அத்தனை பேருமே, சட்டத்தினால் குற்றவாளிகளாக்கப்பட்டவர்கள்...!

இறந்த கால நிகழ்வுகளின் அனுபவத் தொகுப்புக்களும்- நிகழ்கால அமைப்புகளுந்தான் மனிதனை நெறிப்படுத்துகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாதையில் மனிதன் குற்றமும் புரிகின்றான். புரிய வேண்டியவனாகின்றான்!

நரம்புகள் உருவப்பட்ட வெறும் முண்டமான சட்டத்தினால் துலாபாரமிடப்படுகின்றது!

சமுதாயத்திலிருந்து புறம்புபடுத்தி- நான்கு சுவர்களுக்கு மத்தியில் அவனைத் தனிமைப்படுத்தி- வதைப்பதன் மூலம் அவனிடமிருந்து என்ன மாற்றத்தை இந்தச் சட்டம் எதிர்பார்க்கின்றது...?

சமுதாயத்தில் வாழ்ந்து அதை அனுபவிப்பதன் மூலம் தான் மனிதன் தன்னை நெறிப்படுத்திக் கொள்ள முடியும்

மணியடித்தால் சாப்பாடு. 'லைற்' அணைத்தால் படுக்கை... இதற்கிடையில் எத்தனையாயிரம் உணர்வுகள்... அத்தனை உணர்வுகளுமே வரண்டுகல்லாகி மனிதனைப் பகுத்தறிவு வட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி அவனை மிருகமாக்கிவிடுகின்றது!

கண்ணீர் சிந்துகின்ற இரக்கப் பண்பைக்கூட மனிதன் இழந்து மிருகத்துள் முதன்மையடைகின்றான்!

செல்லப்பாவின் சிந்தனைச் சுழி பகுத்தறிவைக் குடைகிறது.

யாழ்ப்பாணம் கோட்டை சிறைச்சாலையில் ஆரம்பமான செல்லப்பாவின் சிறை வாழ்க்கை- நேற்று வெலிக்கடைச்சிறைச் சாலையோடு முடிவடைந்தது.

நேற்றுக்காலை பத்துமணியளவில்

வெலிக்கடைச் சிறைச்சாலை மேலதிகாரியால் செல்லப்பா அழைக்கப்பட்டார்.

இன்று தனக்கு விடுதலை கிடைக்கப் போவது பற்றி செல்லப்பா கனவில்க் கூட நினைக்கவில்லை.

ஆண்டு, மாதம், திகதி தெரியாத சீவன்கள்!

''சொந்த ஊர்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மானிப்பாய்.........''

''எத்தினை புள்ளையள்...''

''மூண்டு...''

''... இண்டைக்கு உனக்கு விடுதலை...'' இப்படி அந்த அதிகாரி கூறியபோது செல்லப்பா திகைத்துப் போய் விட்டார். மேலதிகாரியின் பின்பக்கமாகவுள்ள சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும் மிகப் பெருமளவிலான கலண்டரில் இன்றைய திகதியையும், நாளையும் தேடுகின்றார் செல்லப்பா...

''... யூரிகளின் தீர்மானப்படி நீர் குற்றவாளியாகக் காணப் படுகின்றீர்... இன்றிலிருந்து தொடர்ச்சியாக எட்டு வருட சிறைத் தண்டனையை அனுபவிக்க தீர்ப்பிடப்படுகின்றது...''

யாழ்ப்பாணம் நீதி மன்றத்தில் எட்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த அந்தச் சம்பவம் இப்போது நினைவுக்கு வருகின்றது. ... திகதி, நாள், நேரங்கூட அவருக்கு நினைவிலுண்டு...!

''... என்ன செல்லப்பா யோசினை...'' செல்லப்பாவின் முகத்தைப் பார்த்து ஊகித்துக் கொண்ட அதிகாரி கேட்கின்றார். ''... சிறைச்சாலைக்கு வந்த நாள் ஞாபகமிருக்கு... முடியிற இன்றைய நாளைத் தெரியயில்லை...'' செல்லப்பா கூறுகிறார். செல்லப்பாவைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய பத்திரங்களை ஒவ்வொன்றாகப் புரட்டுகிறார் அந்த அதிகாரி. செல்லப்பா மீது சுமத்தப்பட்ட குற்ற விபரங்கள் அடங்கிய நீதி மன்றப் பத்திரத்தின் நகல் பிரதியைப் பார்க்கின்றார்.

அரச நிர்வாகத்திற் கெதிராக இயங்கியமை, அரச நிர்வாகத் திற்கெதிராக மக்களைத் தூண்டியமை இப்படிப் பல குற்றச் சாட்டுக்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆரம்பத்தில் அதிகாரியின் முகத்திலிருந்த உணர்வுகள் மறைந்து புதிய உணர்வு ரேகைகள்... முகம் கடுமையாகமாறுகின்றது... தலையை நிமிர்த்தாமல், கண் விழிகளை மேற் செருகி செல்லப் பாவைப் பார்க்கின்றார். சந்தேகமான பார்வை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எட்டு வருஷங்களுக்கு முன்னமே... உனக்கு இப்பிடி ஒரு எண்ணம் இருந்திருக்கு..." அதிகாரி கூறுகிறான்.

செல்லப்பா எதுவுமே பேசவில்லை.

"செல்லப்பா... எங்களுக்கெதிராக நீங்கள் எப்பிடித்தான் போராட்டம் நடத்தினாலும், எங்களை வெல்லமாட்டியள்... ...சிறீலங்காவின்ரை தலைப்பகுதியிலையும், அதோடை சேர்ந்த சில பகுதியளிலையுந்தான் உங்கடை ஆக்கள் இருக்கினம்... மற்ற இடமெல்லாம் எங்கடை ஆக்கள்தான்... பெரும்பான்மை நாங்கள்தான்...

உடம்புக்குத் தலைதானே முக்கியம்..." என்று கூற நினைத்த செல்லப்பா, தன்னை அடக்கிக் கொண்டு மௌனமாக நிற்கிறார்.

"செல்லப்பா... உனக்கிப்ப எத்தினை வயது..."

"ஐம்பத்திரண்டு..."

"...எட்டுவருஷம் உன்ரை வாழ்க்கை இதுக்குள்ளை முடிஞ்சு போச்சு... இனிமேலென்டாலும் புள்ளையளோடை சந்தோஷமாய் இருக்கப்பார்... உங்கடை ஆக்களுக்கும் சொல்லு..." அந்த அதிகாரி தொடர்ந்து கூறுகின்றான்.

அந்த அதிகாரி சிங்கள இனத்தவராக இருந்தும் இவ்வளவு தூரம் தமிழ்கதைப்பதை நினைத்து செல்லப்பா ஆச்சரியப்பட்டுப் போனார் செல்லப்பா எத்தனையோ சிறை அதிகாரிகளைச் சந்தித்திருக்கிறார். ஆனால், இந்த அதிகாரியோடு பேசுகின்ற வாய்ப்பு இன்றுதான் கிடைத்திருக்கின்றது.

அதிகாரியின் மேசையில் பொருத்தப்பட்டிருக்கும் கண்ணாடிக்குள் மிகப் பெருமளவிலான புத்தரின் படமொன்று வைக்கப்பட்டிருக்கின்றது.

ஆடு மேய்க்கும் குலத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனைக் கட்டியணைத்து அவனிடம் ஆட்டுப்பால் வாங்கிப் பருகிய ;சமதர்மவாதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பா என்றோ ஒருநாள் தான் படித்துக் கொண்டதை இப்போது நினைத்துக் கொள்கிறார்

'பல சாம்ராச்சியங்களைக் கட்டியாண்ட அசோகச் சக்கரவர்த்தி... கடைசியில், பதவியைத் துறந்து பிக்குவானான்...

இன்று...

"என்ன செல்லப்பா புத்தபகவானைப் பார்த்து யோசிக்கிறாய்..."

இந்தக் கேள்விக்கு செல்லப்பாவால் பதில் கூற முடியுமா? செல்லப்பா எதுவுமே பேசவில்லை.

"செல்லப்பா... உங்கடை பகுதியளிலை நடக்கிறதுகள் தெரியுமா..."

"தெரியாது ஸேர்..."

செல்லப்பா சிறைக்கு வந்தபின் எத்தனையோ சம்பவங்கள் நடந்து விட்டன. ஆனால் ஒரு சில விஷயங்கள் மட்டும் செல்லப்பா போன்றோருக்குத் தெரிந்திருந்தது.

கைதிகளின் உறவினர்கள், கைதிகளைப் பார்க்க வருகின்றபோது ஏதாவது பலகாரங்கள் கொண்டு வருவார்கள். அந்தப் பலகாரங்கள் கட்டப்பட்டிருக்கும் பத்திரிகை.

புதிதாகச் சிறைக்கு வருபவர்கள் கூறுகின்ற செய்திகள்!

திடீரென்று எந்தக் காரணமுமின்றி சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளைத் தாக்குவார்கள்.

சில வேளைகளில் சில தமிழ் அதிகாரிகள் வந்தால் அவர்களுக்கும் வாய்ப்புக்கிடைத்தால் ஏதாவது கூறுவார்கள்...

இவைகள் மூலம் ஒரு சில விஷயங்களைத்தான் செல்லப்பா போன்றோர் தெரிந்துவைத்திருந்தனர்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தவர்களேயே திரும்பவும் பார்த்து, பேசியவைகளேயே திரும்பவும் பேசி சிந்தித்தவைகளேயே திரும்பவும் சிந்தித்து... செய்தவற்றையே திரும்பவும் செய்து... மரத்துப்போன இதயங்கள்......!

''செல்லப்பா... உங்கடை பகுதியில் நான் நீண்டகாலம் உத்தியோகம் பார்த்திருக்கிறன்... அங்கைதான் தமிழைப் படிச்சனுன்...'' செல்லப்பா அறிய விரும்பியும் கேட்காமல் விட்டதை அந்த அதிகாரி தாஞகவே கூறுகிருர்.

அங்கு வந்த ஒரு சாதாரண சிப்பாய் சிங்களத்தில் ஏதோ கூறுகிருர்.

சிறைச்சாலேக்கு வந்தபின், தவிர்க்க முடியாத நிலேயில் செல்லப்பா சிங்களத்தைக் கற்றுக் கொண்டான். யாரோ ஒரு தேரோ அந்த அதிகாரியைப் பார்க்க விரும்புகிருர் என்ற செய்தியைத்தான் அந்தச் சாதாரண சிப்பாய் கூறினுன். தேரோவும் அங்கு வந்து விட்டார்.

தேரோவும் அதிகாரியும் சிங்களத்தில் நீண்டநேரம் உரையாடினர். அவர்களின் உரையாடல்களே பூரணமாக செல்லப்பாவால் விளங்கிக்கொள்ள முடியாவிட்டாலும், சிறீலங்காவின் வடக்குக் கிழக்குப் பகுதி சார்ந்த விஷயங்கள் என்பதை செல்லப்பா உணர்ந்து கொண்டார்.

இடையே

செல்லப்பா யாரென்பதை அதிகாரியிடம் விசாரிக்கின்ருர் பிக்கு. அதிகாரி செல்லப்பாவைப் பற்றிக் கூறுகின்ருர்.

பிக்கு செல்லப்பாவைப் பார்த்த பார்வை...!

அதிகாரியின் மேசைக் கண்ணுடிக்குக் கீழ் வைக்கப் பட்டிருக்கும் புத்தபிரானின் உருவப்படம்...

புத்தபிரானின் பிரதிநிதிகளான பிக்குகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே காவி உடை...

அதே தலை...

ஆனால்,

உள்ளங்கள்!...?

சில நிமிடங்களில் பிக்கு சென்றுவிடுகின்றார். அதிகாரி செல்லப்பாவின் விடுதலை தொடர்பான குறிப்புக்கள் எழுதுவதில் ஈடுபட்டிருக்கின்றார்.

''செல்லப்பா...''

''சேர்...''

''சிங்களம் தெரியுமா...''

''கொஞ்சம் தெரியும்...''

''...பிக்கு என்ன கதைச்சவர் எண்டு விளங்கிச்சிதா...''

''இல்லைச் சேர்...''

''...விளங்கியிருந்தால் நல்லாய் இருக்கும்''

செல்லப்பா பேசவில்லை.

'செல்லப்பா உனக்கு இண்டைக்கு விடுதலை' என்று அதிகாரி கூறிய நேரத்திலிருந்து செல்லப்பாவினால் நிலத்தில் நிற்கமுடியவில்லை...

ஏதோவொரு வேகம்; உணர்வு; அவரது மனத்தை அந்தரிக்க வைத்துக்கொண்டிருந்தது

இறந்துபோனால் என்ன என்று தினசரி யோசித்தவர் இப்போது, இறக்கக்கூடாது; இன்னும் நீண்டகாலம் வாழவேண்டும் என்று ஆசைப்படுகின்றார்... மனைவி மக்களைக் காண வேண்டும் என்ற துடிப்பு... எப்போது சிறைப்படிகளைத் தாண்டுவேன் என்ற அந்தரம்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலிலே புதிய தென்பு

உள்ளத்திலே புதிய உணர்வலைகள்

"சேர்..."

"என்ன..."

"நான் இண்டைக்கே போகலாமா..." தன்னை அறியாமலேயே செல்லப்பா கேட்டுவிட்டார்.

"இரவு றெயினுக்குப் போனால், வவுனியாவிலை இறங்கி காலையிலை பஸ்ஸிலை போகலாம்"

"எத்தினை மணிக்கு யாழ்ப்பாணம் போய்ச்சேரலாம்..."

"வவுனியாவிலை பிரச்சினை இல்லாமல் பஸ் இருக்குமெண்டால் மத்தியானமே போயிடலாம், இல்லாட்டி பஸ்ஸைப் பொறுத்துத்தான் போகலாம்..."

"ஏன்சேர்...வவுனியாவிலை ஏதாவது பிரச்சினையா..."

"...நெடுகப் பிரச்சினை தானே..."

"...அப்பிடி என்ன பிரச்சினை சேர்..."

"வழமையான பிரச்சினைகள் தான்"

வழமையான பிரச்சினைகளை செல்லப்பாவால் உணர்ந்துகொள்ள முடியுமா...?

'முருகா: எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இருக்கவேணும்' அவர் மனம் நேர்த்தி வைக்கின்றது.

கிட்டத்தட்ட பதினொரு மணியளவில் செல்லப்பா விடுதலை செய்யப்படுகிறார்.

கொழும்பிலிருந்து வவுனியாவரை புகையிரதத்தில் பிரயாணம் செய்து, எப்படியோ யாழ்ப்பாணம் பஸ்ஸிலும் ஏறிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டத்தட்ட நான்கு மணியளவில் யாழ்ப்பாணபஸ்,வவுனியா பஸ்நிலையத்தை ஒரு சுற்றுச் சுற்றிப் புறப்படுகின்றது.

வவுனியா அமைதியாகவே இருக்கின்றது.

செல்லப்பாவுக்குப் பெரும் திருப்தி.

# 2

செல்லப்பா —

பொதுநிறம், கணக்கான உயரம், அதற்கான உடலமைப்பு, சிறியதொந்தி; பக்க வகிடிட்டு வாரி விடப்பட்டிருக்கும் ஐதான தலைமயிர், தடித்த மீசை, எதையுமே இலகுவாகப் புரிந்து கொள்ளும் கூர்மையான புத்தியைப் பிரதிபலிக்கும் கண்கள்; இளமையில் ஏற்பட்ட ஒரு விபத்தினால் இப்போதும் நடக்கும் போது சிறிது பக்கவாட்டில் சரிந்து கொள்வார்.

நகைச்சுவையாகப் பேசி, தானும் சிரித்து மற்றவர்களையும் சிரிக்க வைப்பதில் வல்லவர்.

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டாலும், கலியாணத் தோடு மானிப்பாய் வாசியாகிவிட்டார்.

இரவு ஏழரை மணியிருக்கும்.

முழத்துக்கொரு தடைமுகாம்கள்; அவைகளைத் தாண்டி, இறுதியாகவுள்ள ஆனையிறவு தடைமுகாமை நெருங்கிக் கொண் டிருக்கிறது பஸ்.

அடுத்து, நாவற்குழி தடைமுகாம் அதைப்பற்றி யாருமே அக் கறைப்பட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்கள் இப்போது நாவற்குழியால் போவதில்லையென்ற செய்தியை இப்போதான் செல்லப்பா கேள்விப்பட்டார். பிரயாணிகள் மனநிறைவோடு நீட்டி நிமிர்ந்து இருக்கின்றனர். செல்லப்பாவின் இவ்வளவு கால வாழ்க்கையிலும் இவ்வளவு கெடுபிடியான இராணுவ நடைமுறைகளை இப்போதுதான் காண்கின்றார்.

இவ்வளவு கெடுபிடிகளும் ஏன்?...

முன்னெச்சரிக்கையா?

அல்லது பலவீனமா?

கிளிநொச்சியில் ஒரு தடைமுகாம், ஒருமைலுக்கப்பாலுள்ள பரந்தனில் அடுத்த தடைமுகாம் கிட்டத்தட்ட இரண்டு மைல் களுக்கப்பால், ஆனையிறவில் அடுத்த தடைமுகாம்!...... மூன்று மைல்களுக்கிடையில் மூன்று தடைமுகாம்கள்!

ஆனையிறவு தாண்டினால், வடமுனைவரை எந்தத் தடைமுகா முமில்லை.

முகாம்கள் இருக்கின்றன. அங்கு ராணுவத்தினர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.........!

தடுத்து வைத்திருப்பவர்கள் ...?...!

செல்லப்பா முருகண்டியில் கச்சான் வாங்கினார். கச்சான்சுற்றிக் கொடுத்த ஒரு தினசரிப்பத்திரிகையில் மேற்படி விஷயம் குறிக் கப்பட்டிருந்தது... அந்தத் துண்டுப் பேப்பரை எறிய மனமில்லா மல் திரும்பத் திரும்ப வாசிக்கின்றார்.

பக்கத்தில் இருந்த ஒருவரிடம் அந்தப்பகுதியைச் சுட்டிச்காட்டு கிறார், அவரும் அதைவாசிக்கின்றார். ஆனால், செல்லப்பா எதிர்பார்த்தளவிற்கு அந்தப் புதியவர் எந்த அபிப்பிராயமும் கூறவில்லை.

'இதெல்லாம் புளிச்சுப்போன செய்தியள்'' இப்படித்தான் அவர் கூறினார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் ஆனையிறவு தடைமுகாமையும் தாண்டி ஓடிக்கொண்டிருக் கின்றது.

எட்டு வருடங்களுக்கு முன்பு...

அப்போது செல்லப்பா வடபகுதியில் பிரபல்யமானதொரு பத்திரிகைக் காரியாலயத்தில் நிறுவாக முகாமையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

அப்போதிருந்தே அரசின் போக்கைக் கண்டித்து - அரசுக்கெதி ரான பிரச்சாரக் கூட்டமொன்று மானிப்பாய் மருதடிப்பிள்ளை யார் முன்றலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

செல்லப்பாதான் தலைமை வகித்தார்.

அருகிலுள்ள பாடசாலையிலிருந்து எடுக்கப்பட்ட 'பாலர் வகுப்பு' மேசைகள் சிலவற்றை அடுக்கி மேடையாக்கி இரண்டு 'பெற்றோ மாக்ஸ்' வெளிச்சத்தில் பத்தோ பதினைந்து வாலி பர்களோடு கண்டனக் கூட்டம் நடந்து முடிந்தது...

செல்லப்பாதான் காரசாரமாகப் பேசினார்... ஏனைய பேச்சா ளர்கள் ஏனோ ஒதுங்கிக் கொண்டு மழுப்பி விட்டனர்!

"...நம்மவர்கள் இன்று பயத்தினால் மூலைமுடுக்குகளில் ஒதுங் கிக் கொள்ளலாம்... ஆனால், என்றோ ஒருநாள் நமதுமண் போராட்டகளமாகத்தான் போகின்றது... இன்று பத்தோ பதி னைந்து பேரோடு நடக்கின்ற இந்தக் கூட்டம் என்றோ ஒரு நாள் பெருந்திரளான மக்களோடு நடக்கத்தான் போகின் றது. மலையில் ஊற்றெடுக்கும் ஆற்று நீர் என்றும் பின்நோக்கி பாய்வதில்லை!"

செல்லப்பா பேசிமுடித்துவிட்டார்.

அரசாங்க உளவுப்பகுதியினரால் செல்லப்பாவின் பேச்சுக்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, செல்லப்பா கைதுசெய்யப்பட்டார். செல்லப்பா விளக்கமறியலில் இருந்தபோது அவரது மனைவி யும் பிள்ளைகளுந்தான் கவனித்தனர். செல்லப்பாவைத் தெரிந் தவர் என்று கூறவே ஊரவர்கள் அஞ்சினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு பயம்!

செல்லப்பாவின் மனைவி அற்புதம் தனது தாலிக்கொடியை விற்று வழக்காடினாள்... முடிவு... செல்லப்பாவுக்கு எட்டு வருஷ மறியல் தீர்க்கப்பட்டது.

"இவனுக்கேன் இந்தவேலை..."

"அரசாங்கத்தோடை மோதி வெல்லமுடியுமே..." இப்படித் தான் சகலரும் பேசிக்கொண்டனர்.

# 3

கிட்டத்தட்ட ஒன்பதரை மணியிருக்கும் பஸ் யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தை அடைகின்றது.

எட்டு வருடங்களின் பின் செல்லப்பாவின் காலடிகள் யாழ்ப் பாண மண்ணில் பதிந்திருக்கின்றன.

செல்லப்பா பஸ்ஸால் இறங்கி பஸ்நிலையத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை காரியாலயத்தின் முன் நிற்கின்றார்.

பஸ்ஸில் வந்த பிரயாணிகள் அவசர அவசரமாக இறங்கு கின்றனர்.

"கெதியாய் இறங்குங்கோ ஷெல் விழும்." பஸ் சாரதி பிர யாணிகளின் அவசரத்தைத் துரிதப்படுத்துகிறார்.

பிரயாணிகள் பஸ்ஸிலிருந்து இறங்கி ஓட்டமும் நடையுமாக செல்கின்றனர். சில நிமிடங்களில் சகலருமே சென்று செல் லப்பா மட்டும் தனித்து நிற்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணவீட்டில் முகூர்த்தநேரக் கலகலப்புகள் காணப்படும் யாழ்ப்பாணம் பஸ்நிலையம் வெறிச்சோடிப்போய்க்கிடக்கின்றது...

பிரயாணிகளின் வசதிக்காகக் கட்டப்பட்டிருக்கும் பஸ்நிலைய தங்குமிடத்தின் நடுவில் சாக்குமூடைகள் அடுக்கப்பட்டு 'பாதுகாப்பு அரண்'' என்ற அறிவித்தலும் போடப்பட்டிருக்கின்றது.

செல்லப்பாவால் எதையும் புரிந்து கொள்ளமுடியவில்லை...

அங்கிருந்து நடந்துபோய் அந்தச் சாக்கு மூடைகளைத் தொட்டுப் பார்க்கின்றார்...

மண்மூடைகள்......

சர்வதேச அரங்கில் போராட்டம் நடாத்திய சில நாடுகளின் போராட்ட வரலாறுகள் படித்தபோது மண்மூடைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது அவருக்கு நினைவுக்கு வருகின்றது.

பாதுகாப்பு... யாருக்கு...?

நமது மக்கள் இவ்வளவு சுதந்திரமாக பாதுகாப்பரண் அமைத்துள்ளனரா...?

செல்லப்பாவைக் கைதுசெய்வதற்கு எத்தனை ஜீப்புக்கள், எத்தனை காவலர்கள்... செல்லப்பாவின் வீட்டைச் சுற்றிவளைத்து... அப்படிப்பட்டவர்கள் இன்று இந்த அரணை அமைக்கவிட்டனரா...?

செல்லப்பாவால் எந்தக் தீர்மானத்திற்கும் வரமுடியவில்லை.

மானிப்பாய்க்குப் போகவேண்டும். எப்படிப்போவது... செல்லப்பாவுக்குத் தற்போதுள்ள பெரும் பிரச்சனை!

ஆஸ்பத்திரிக்குள்ளை போனால் எங்கையாவது படுத்திட்டு... நாளைக்குவிடியப் போகலாம் அவரது மனம் இப்படி எண்ணுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பெல்லாம் செல்லப்பா இப்படித்தான் செய்வார்; அனு பவ உணர்வு...

அங்கிருந்து ஆஸ்பத்திரிப்பக்கம் நோக்கி நடக்க ஆரம்பிக்கின் றூர்.

செல்லப்பாவும் அவரது நண்பர்களும் தினசரி சந்தித்து'அரசி யல் அலம்பல்' நடாத்துகின்ற பூபாலசிங்கம் புத்தகக்கடை வாசல், கதையோடு கதையாக அன்னநடை நடந்துபோய் தேநீர் குடிக்கின்ற 'சுபாஸ்கபே'...இவைகளுக்கு ஒத்து ஊது வது போல்'சிவசக்தி கூல்பாரில்' எக்கவுண்டுக்கு, வாங்கிப் புகைக்கும் சிகரட்...

செல்லப்பாவின் மனதில் பழைய நினைவுகள் வெடிக்கின்றன... முனீஸ்வரன் வீதி ஆஸ்பத்திரி வீதியோடு இணைகின்ற சந்தி... அந்தச்சந்தியிலிருந்து முனீஸ்வரன் வீதிக்குச் செல்லுகின்ற பாதை —

உருக்குலைந்த வாகனங்களின் உதிரிப்பாகங்களால் நிறைக்கப் பட்டுத் தடைசெய்யப்பட்டிருக்கின்றது....

ஒருபுறம் மண்மூடைகளால் பாதுகாப்பரண்,மறுபக்கம் வீதித் தடை....

சில நிமிடங்கள் தரித்துநின்ற செல்லப்பா குழம்பிய சிந்தனை யோடு' நடை'யைத் தொடர்கிறூர்.

உருக்குலைந்த வாகனங்கள் அடுக்கப்பட்டிருக்கும்இடத்திலிருந்து-

வலதுபக்கமாக கிட்டத்தட்ட இருபதடி தள்ளி...பத்துப்பதி னைந்து பேர்வரையில் நிற்கின்றனர்.

உடுப்புகள்- ஆயுதங்கள்... அவர்கள்...

பொலிசார்...

இல்லை, ஆமிக்காறர்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பாவின் நெஞ்சு உலர்ந்து, உடலெல்லாம் நடுங்கி...

செல்லப்பாவும் அவர்களைப் பார்க்கின்ருர், அவர்களும் செல்லப் பாவைப் பார்க்கின்றனர்....

செல்லப்பா, சிறைச்சாலையில் இடையிடையே கேள்விப்பட்ட 'அகாலமரணச் சம்பவங்கள்'...அவரது இதயத்தை எரிக்கின் றது. எட்டு வருடங்கள் அடைபட்டுக் கிடந்து இன்றுதான் வந்தார் .. பெண்சாதி பிள்ளைகளைப் பார்ப்பதற்கு முன்னமே...? அவர் அங்கிருந்து ஓடிவிட நினைக்கிருர் கால்கள் செய லிழந்து விட்டன.

அந்தக் காக்கிச் சட்டைகள் செல்லப்பா நின்றுகொண்டிருக்கும் இடத்தை நோக்கி வருகின்றன....

அவர்களின் உரையாடல்...

தமிழில்...

அதுவும் நல்ல தமிழில்...!

''அண்ணை...என்ன யோசிக்கிறியள்... அது நாங்கள்தான்...''

செல்லப்பாவின் மன நிலையைப் புரிந்து கொண்ட அவர்கள் இப்படிக் கூறுகின்றனர்.

உலர்ந்திருந்த செல்லப்பாவின் இதயத்தில் மெல்லிய குளிர்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

இவர்கள்—அவர்களல்ல......

நம்மவர்கள்... எங்கடை 'பொடியள்...'

செல்லப்பா இப்போதுதான் சுயநிலைக்கு வருகின்றார். 'எங்கடை பொடியள்' என்ற வார்த்தைகளை சிறைச்சாலையில் செல்லப்பா கேள்விப்பட்டிருக்கின்றார்.

அவர்கள் நின்று ஆதிக்கம் செலுத்திய இடத்தில் இன்று நம்மவர்கள்—''பொடியள்...''செல்லப்பாவின் இதயத்தில் ஒருபாதி ஆச்சரியம்—

மறுபாதி— ஆனந்தம்!

பயத்தினால் குரலடைத்து நின்றவர்— இப்போது ஆனந்தத்தினால் வாயடைத்து நின்றார்.

''அண்ணை... எங்கை போகவேணும்...''

''...நான்... நான்... '' செல்லப்பாவின் நாக்குப் புரளமறுக்கின்றது.

அண்ணை... என்ன யோசிக்கிறியள்... எங்கை போக வேணும்...''

'...நான் கொழும்பிலை இருந்து வாறன்... மானிப்பாய்க்குப் போகவேணும்...''

''இனி வாகனம் ஒண்டும் இருக்காது... ரவுணிலை தங்கிப் போட்டு நாளைக்குப் போங்கோ...''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கு ரவுணிலே தங்க வசதியில்லே...''

''ஏன்...''

''எட்டு வரியத்துக்குப் பிறகு இப்பதான் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிறன்...''

''கொழும்பிலே உத்தியோகம் பாக்கிறியளா...''

''...இல்லே...''

''கொழும்புதான் சொந்த...''

''...இல்லே... நான் மறியலிலே இருந்தனான்...''

''சரி... வாருங்கோ...'' அவர்கள், செல்லப்பாவை அழைத்துக் கொண்டு வந்து, கடை வாசலில் இருக்க விடுகின்றனர்.

பூட்டப்பட்டிருக்கும் கடை வாசல் படிக்கட்டில் செல்லப்பா அமர்கிறார்.

காக்கிலோங்ஸ், அதன் அடிப்பக்கம் சுருக்கிக் கட்டப்பட்டு— தடித்த சப்பாத்து, காக்கிச் சேட், பெரிய அளவில் மடித்து விடப்பட்டிருக்கும் கைப்பகுதி, இரும்புத் தொப்பி, இடுப்பில் தடித்த பெல்ட், கைகளிலே... ஆயுதம்...

அந்த வாலிபர்களை பாதாதிகேசம்வரை நோக்குகின்றார் செல்லப்பா.

எங்கடை 'பொடியள்'

எவ்வளவு மாற்றம்...?...!

அவர்களில் ஒருவன் மிகவும் உயர்ந்தவன்; கறுத்த தடித்த தோற்றம். தளகர்த்தத்தனமான நிமிர்ந்த நிலை அவன்தான் இவர்களின் தலைவனாக இருக்க வேண்டும்.

அவன் கைகளில் சிறிய சற்சதுரமானதொரு பெட்டியை வைத்திருக்கின்றான். இடையிடையே அதன் மூலம் ஏதோ செய்திகள் வருகின்றன. அந்த வாலிபனும் ஏதோ பதில் கூறிக் கொண்டிருக்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு நூதனமான கருவி...

செல்லப்பா சிறைச்சாலையில் இருந்தபோது, நெருக்கடியான சில சந்தர்ப்பங்களில், உயர் அதிகாரிகள் இது போன்ற கருவிகளை வைத்திருந்ததை செல்லப்பா கண்டிருக்கிருர்.

போராட்டத்தில் விஞ்ஞான நுணுக்கமான கருவிகளையும் 'நம் மவர்கள்' உபயோகிக்குமளவிற்கு வளர்ந்து விட்டனர்...

செல்லப்பாவின் காலத்தில் —

கிளிநொச்சி, முத்தையன்கட்டு போன்ற கமத் தொழில் பிரதேசங்களிலிருந்து புகையிலைச் சாக்குக்குள் வைத்துக் கட்டி பஸ்களின் மேற்புறங்களில் போட்டு இங்கு கொண்டுவரப்பட்ட 'நாய்த்துவக்குகள்'...

கைகளினுல் சுற்றப்பட்ட கைக்குண்டுகள்...

என்பனதான் ஆயுதங்களாக இருந்தன. ஆனுல், அவைகளும் முழுமையாகப் பாவிக்கப்பட்டதில்லை... சட்டத்திற்குப் பயந்து எங்காவது கண்காணுத; மனித நடமாட்டம் இல்லாத இடங்களில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும்.

தற்செயலாக எங்காவது ஒன்ரு இரண்டு கைக்குண்டுகள் வெடித்து விட்டால் போதும்... பத்துநாட்களுக்கு பத்திரிகையின் முன்பக்கத்தில் இந்தச் செய்திதான் போடப்பட்டிருக்கும்...!

செல்லப்பாவின் மனம் நிகழ்காலத்திலிருந்து, இறந்தகாலத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

செல்லப்பா, கையில் வைத்திருந்த 'ஷொப்பிங்' பைக்குள் கையைவிட்டு, வீடிக்கட்டிலிருந்து, ஒரு வீடியை உருவி எடுத்து, மூட்டுகிருர்.

"உங்கடை பேரென்ன..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''செல்லப்பா...''

''குடும்பம் இருக்கா...''

''...மூண்டு புள்ளையள்...''

''என்ன குற்றத்திலை மறியலுக்குப் போனனீங்கள்...''

''அரசாங்கத்துக்கு எதிராக கூட்டம் வைச்சுப் பேசினது...''

அந்த வாலிபர்கள் செல்லப்பாவை ஆச்சரியத்தோடு பார்க்கின்றனர்...''

சிறைச்சாலை சம்பந்தமான உரையாடல் நடைபெறுகின்றது.

''நான் மானிப்பாய்க்குப் போகவேணும்...'' இடையே செல்லப்பா தன் பிரச்சினையையும் நினைவு படுத்திக் கொள்கிறார்.

''...ஒழுங்கு செய்யலாம்...''

திடீரென்று...

அவர்கள் நின்று கொண்டிருக்கும் இடத்திலிருந்து மேற்குப் புறமாக... தொடர்ச்சியான துப்பாக்கிச் சூட்டுச் சத்தம்...

வாலிபர்கள் உஷாராகுகின்றனர், செல்லப்பா வீடித்துண்டையும் எறிந்துவிட்டு, ஷொப்பிங் பையையும் தூக்கிக் கொண்டு கடையின் சுவர் பக்கமாகச் செல்கிறார்.

அவர்களின் தலைவன், அந்தச் சதுரக் கருவியின் மூலம் செய்தி எடுக்கின்றான்.

''வழமையான செய்திதான்...'' அங்கு நின்ற ஏனைய வாலிபர்களுக்கு தலைவன் கூறுகிறான். அதை அந்த வாலிபர்களால் புரிந்து கொள்ள முடிகின்றது.

செல்லப்பாவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன தம்பி விஷயம்...'' செல்லப்பா பயத்தோடு கேட்கிறார்.

''ராணுவம் வெளிக்கிடப்பாத்திருக்கு... எங்கடை தோழர்கள் தடுத்துக் கொண்டிருக்கினம் அவ்வளவுதான்''

அந்த வாலிபன் சர்வசாதாரணமாக சொல்லிவிட்டு நிற்கிறான்

''தம்பி... சிலவேளை ஆமிக்காறர் வெளிக்கிட்டால்...'' செல்லப்பா பயத்தோடு கேட்கிறார்.

''அப்படி ஒண்டும் நடக்காது...''

''தம்பி...''

''என்னண்ணை...''

''கோட்டையுக்குள்ளை கிட்டத்தட்ட எத்தினை ஆமிக்காறர் இருப்பினம்...''

''நாலுாறு, ஐநூறுபேர் வரையிலை இருப்பினம்...''

''பெடியள் எத்தனை பேரளவிலை நிக்கினம்...''

''எல்லாப்பக்கத்திலையும் எங்கடை பெடியள் நிக்கினம்... சுப்பிரமணியம் பூங்காவுக்கை பத்து பதினைந்து பேர் நிக்கினம்...''

சுப்பிரமணியம் பூங்காப் பக்கத்திலிருந்துதான் சூட்டுச் சத்தம் கேட்கின்றது.

''ஏன் தம்பி... பத்துப் பதினைஞ்சு பேராலை இவ்வளவு தொகையான ஆமிக்காறரை தடுக்கேலுமே...'' செல்லப்பா சந்தேகத்தோடு கேட்கின்றார்.

அவர் இதயம் பலமாக அடித்துக் கொள்கிறது.

''அண்ணை... எங்கடை ஒவ்வொரு தோழரும் ஒராயிரம் ஆமிக்காறருக்குச் சமமானவர்கள்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பா அரைகுறைத் திருப்தியோடு கடை வாசல் படிக்கட்டில் திரும்பவும் அமர்கிறார்.

அன்று — செல்லப்பாவுக்கு நன்றாக நினைவுண்டு. யாழ்ப்பாணம் முற்றவெளியில் தமிழாராய்ச்சி மகாநாடு நடந்தது.

ஈற்றில், விரல்விட்டு எண்ணக் கூடிய சில பொலிசாரால், பல லட்சக்கணக்கான மக்கள் துரத்தப்பட்டனர்,

அன்று — உயிரை இழந்தவர்கள், காயப்பட்டவர்கள், உடுப்பை இழந்தவர்கள்... அத்தனை சம்பவங்களும் திரைப்படம் போல் செல்லப்பாவின் மனதில் ஓடுகின்றது...!

அன்று தலைதெறிக்க ஓடியவர்களின் வழியில் வந்தவர்கள் இன்று...

எதிர்த்து நிற்கின்றனர்...!

பூனையை நாய் கலைக்கும், பூனை தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடும், ஓடி, ஓடி... ஓட முடியாத நிலை ஏற்படுகின்றபோது பூனை நாயை எதிர்க்கும்—

மரணத்தின் எல்லையில் பிறக்கின்ற துணிவு...! பூனை மூர்க்கத்தனமாக எதிர்க்கும்... நாய் பயந்து போய்விடும்.

என்றோ ஒருநாள் ஒரு புத்தகத்தில் வாசித்தது இப்போது செல்லப்பாவுக்கு ஞாபகத்துக்கு வருகின்றது.

அந்தப் பூனைகளாக ஓடியோடி... மரணத்தின் எல்லைக்குப் போன நம்மவர்கள்—

இன்று புலிகளாக நிற்கின்றனர்!

ஏதோவொரு உணர்வில் செல்லப்பாவின் உடல் விறைத்துக் கொண்டு வருகின்றது. உடல் இயக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற மரண விறைப்பல்ல...! ஆத்மாவை வளப்படுத்துகின்ற புத்துணர்வால் ஏற்படுகின்ற விறைப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் ஓய்வதாயில்லை.

தலைமை தாங்கி நிற்கும் அந்த வாலிபன் கையில் வைத்திருந்த கருவியை வாய்க்கு நேராகப் பிடித்து ஏதோ கூறுகின்றான்.

அத்தோடு அங்கு நின்றவர்களுக்கும் ஏதோ கூறுகின்றான்.

அவ்வளவுதான் சகலரும் உஷாராகுகின்றனர்.

கிட்டத்தட்ட பத்துநிமிடங்களில் ஒரு நீல நிற 'பிக் அப்' வந்து நிற்கின்றது... அதிலிருந்து பல வாலிபர்கள் இறங்குகின்றனர்...

எத்தனையோ வகையான ஆயுதங்கள்...

அவர்களுக்குள் ஒரு தலைவன் அவன் இங்கு நின்ற தலைவனோடு கதைக்கின்றான்.

அடுத்தகணம்-

தலைவன் முன்னே செல்ல, ஏனையோர் அவனைப் பின்தொடருகின்றனர்... துப்பாக்கிவேட்டுக்கள் வரும் திசையை நோக்கித்தான் அவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்...

''தம்பி... அங்கையிருந்துதானே குண்டுகள் வருகுது...''

செல்லப்பா பயந்துபோய் அங்கு நின்ற தலைவனிடம் கூறுகிறார்.

''குண்டுவாற பக்கத்திலைதான் எதிரிகள் நிற்கிறார்கள்...அவர்களை நோக்கித்தான் நமது தோழர்கள் செல்கிறார்கள்...''

'நாய்த்துவக்கைக் கண்டு ஓடியவர்கள்... இன்று...குண்டுவாற திசையை நோக்கிச் செல்கின்றனர்...'

சில விநாடிகளில் எதிர்த்தாக்குதல் உக்கிரமாக நடைபெறுகின்றது...தொடர்ந்து சில நிமிடங்களில்...அமைதி ஏற்படுகின்றது.

'பிக்அப்'பில் வந்தவர்கள் திரும்பவும் ஏறிச் செல்கின்றனர்.

அத்தனையும்- ஒரு ஆங்கிலப்படம்போல் நடந்து முடிகின்றது!

''அண்ணன் கொஞ்சநேரம் பொறுத்து உங்களைக் கொண்டு போய் விடுகிறம்...'' தலைவன் கூறுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

கிட்டத்தட்ட பத்தரைமணியிருக்கும்...

ஆஸ்பத்திரி வீதியில்

ஒரு கிழவியும் அந்தக் கிழவியோடு பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க ஒரு பையனும் இந்த வாலிபர்கள் நிற்கும் திசையை நோக்கி வருகின்றனர்.

கிழவியின் தலையில் ஒரு கடகம்.

இந்தப் பயங்கரச் சூழ்நிலையில், அதுவும் இந்த நேரத்தில் வாழ்க்கையின் 'வட்டுக்குள்' சென்று விட்ட கிழவியும், வாழ்க்கையில் 'அடி மரத்தில்' நிற்கும் பையனும் எவ்வளவு துணிவாக வருகின்றனர்... இந்த வாலிபர்களை நோக்கித்தான் வருகின்றனர்.

அண்மையில் வந்து விட்டனர்—

"சொல்லி அனுப்பியிருந்தால் நாங்களே வந்து எடுத்திருப்பமே ஆச்சி..." தலைவன் கூறுகிறான்.

கிழவி கடகத்தை இறக்கி வைத்துவிட்டு குந்தி அமர்கிறாள்— அவளுக்கு மூச்சு வாங்குகின்றது.

கடகத்துக்குள் கிழவி என்ன கொண்டு வந்திருக்கிறாள்... செல்லப்பாவின் மனத்தை இந்தக் கேள்வி அரிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் வேலைக்கு வந்திட்டன்...... வெடிச் சத்தம் ஆரவார மாய் கேட்டிது. அதாலை அந்த மரத்துக்குக் கீழை இருந்திட் டன். அது தான் நேரம் போட்டிது..."

"அது வழமையான வெடிச்சத்தம்..."

"... இண்டைக்குத் தோசை கொண்டு வந்திருக்கிறன்..", அந்தக் கிழவி கூறுகின்றாள்.

'பொடியளுக்குத்' தேவையான இரவுச் சாபபாடு கொண்டு வந்திருக்கின்றாள்.

"ஆச்சிக்கு புள்ளை குட்டியள் இருக்கே"

"இருக்குதுகள் மன்றாரிலைதான் எல்லாரும்..."

"இஞ்சைதனியத்தான் இருக்கிறியளா..."

"தனியத்தான்..."

"பயமில்லையா ..."

"...நீங்கள் இருக்கயிக்கை என்ன பயம்"

"அப்ப சாப்பாட்டுச் சிலவுக்கு என்ன செய்கிறியள்..."

"கூப்பன் தந்திருக்கினம் லீவான நேரத்திலை ஆஸ்பத்திரி வாச லிலை கச்சான் விக்கிறனான்..."

"இவ்வளவு தோசையும் சுட்டது..."

"நான்தான்..."

"தனியவா..."

"தனியத்தான்..."

இதுக்குச் சிலவு..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மன்னருக்கு என்ரை பேரப்புள்ளையளைப் பாக்கப் போறதுக் கெண்டு கொஞ்சம் காசு மிச்சம் பிடிச்சு வைச்சிருந்தனான்... அந்தக் காசுக்குத் தான் சாமான் வாங்கினனான்...''

''அப்ப பேரப்புள்ளையளைப் பாக்கிற ஆசை இல்லையா...''

''பேரப்புள்ளையளை எப்பவும் பாக்கலாம் ஆனால், எங்கடை பொடிப்புள்ளையள் தானே முக்கியம்'' கள்ளங்கபடமின்றி அந்தக் கிழவி கூறுகிறாள்.

''எங்கடை பொடிப்புள்ளையள்தானே'' அந்தக் கிழவியால் உச்சரிக்கப்பட்ட அந்த வாக்கியம் செல்லப்பாவின் இதயத்துள் சுழியடிக்கின்றது!

''எடை விசரா... அரசாங்கத்துக்கெதிராய் கதைக்கலாமே... நீ நினைக்கிறதுமாதிரி எப்பவும் நடக்காது... வீண் கதையள் கதைச்சு அழிஞ்சு போகாதை...'' எட்டுவருஷங்களுக்கு முன்பு செல்லப்பா கூட்டத்தில் பேசியதைக் கேள்விப்பட்ட பக்கத்து வீட்டுக்கார வள்ளியாச்சி இப்படித்தான் பேசினாள்.

வள்ளியாச்சி மட்டுமா பேசினாள்... எல்லோருமே இப்படித் தான் பேசினர்...

இன்று

அந்தக்கிழவி பொடியளுக்குச் சாப்பாடு கொண்டு வந்திருக்கின் றாள்.

''தம்பி...'' அந்தக்கிழவி பேச்சை ஆரம்பிக்கின்றாள் 'தம்பி' என்ற அந்த உச்சரிப்பில் உயிர் துடிப்பதை செல்லப்பா உணர் கிறார்.

''என்னாச்சி...''

''எனக்கொரு உதவி செய்யுங்கோ...''

''என்ன உதவி ஆச்சி...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இவன் பொடியன் உங்களோடை சேரப்போறனெண்டு ஒற்றைக்காலிலை நிக்கிறான். உங்களுக்குத் தொட்டாட்டு வேலையள் செய்வான்...வைச்சிருங்கோவன்...''

அந்த வாலிபன் ஆச்சரியத்தோடு அந்தப் பையனைப்பார்க்கிறான். செல்லப்பா திகைத்துப் போய் இருக்கிறார்.

''உங்கடை சொந்தக்காரப்பையனோ''

''ஓம்...என்ரை தங்கச்சியின்ரை பேரன்...என்னோடை தான் நிற்கிறான்...''

''தம்பி...படிக்கப் போறனீங்களோ...'' அந்த வாலிபன், பையனிடம் கேட்கிறான்.

''போறனான்...''

''என்ன வகுப்பு...''

''எட்டாம் வகுப்பு...''

''எங்களோடை வர விருப்பமா...''

''ஓம்...''

''படிக்கவிருப்பமில்லையா...''

''படிச்சு என்ன செய்யிறது... பொடியளை கொன்றுகுவிக்கிறாங்கள்... படிச்சு உத்தியோகம் குடுக்கப் போறாங்களே... தேவையில்லாமல் சூடு வாங்கிச் சாகிறதை விட, தேவையோடு சாகலாம்'' அந்தக்கிழவி கூறுகிறாள்.

நமதுமக்கள் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். இல்லாவிட்டால் இந்தக் கிழவி இவ்வளவுதூரம் கதைப்பாளா...?

''நான் படிக்கப் போகமாட்டன்...'' அந்தப் பையன் கூறுகிறான்.

''ஏன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் உங்களோடை இருக்கப்போறன்...''

அந்தவாலிபன் உணர்ச்சி மேலீட்டினுல், முழங்கால் இரண்டை யும் நிலத்தில் ஊன்றி அமர்ந்து, தனது இரு கைகளாலும் மலர் களை ஏந்துவதுபோல் அந்தப் பையனின் முகத்தைத் தாங்கி... அவனது முகத்தையே இமைக்காமல் பார்க்கிறுன்...

''ஒரு போராளியின் இதயத்தைப் போல் மென்மையானது வேறென்றுமில்லை''என்று யாரோ ஒருவர் கூறியது-இதுதானு?

நமது மண்ணில், அடிமை விலங்கோடு தலைகுனிந்து நிற்கும் தர் மத்தாயின் அடிமை விலங்கு முறிகின்ற ஓசை...

தர்மத்தின் பூபாள ஓசை...!

''தம்பி...''

''என்னண்ணை...''

''...ராசா... நீ இப்ப படிக்கப் போ... வயது வந்தாப் பிறகு... உன்னை எங்களோடை சேர்த்துக் கொள்ளிறம்...''

நமது மக்கள் ஒவ்வொருவருக்கும் தியாகசிந்தனை ஏற்பட்டு விட்ட இன்ப உணர்வு ஒருபுறம்; எழுதுகோலுக்குப் பதிலாக சுடுகலனைத் தூக்குகின்ற துர்ப்பாக்கிய நிலையால் ஏற்படுகின்ற வேதனை உணர்வு மறுபுறமாக அந்த வாலிபன் கூறுகிறுன்.

''நான் படிக்கப் போகமாட்டன்...உங்களோடை தான் இருக் கப்போறன்...''அந்தச் சிறுவன் அடம்பிடிக்கிறுன்.

''ஆச்சி...எங்கடை தலைமுறையிலை இல்லாட்டியும்,அடுத்த தலை முறையிலையாவது வெல்லத்தான் போறம்...''

செல்லப்பா சிலையாகிவிட்டார்.

கிழவி அந்தச் சிறுவனைப் பிடித்துக்கொண்டு நடக்கின்றுள்.

செல்லப்பா உட்பட எல்லோரும் அந்த உணவைப் பகிர்ந்து உண்ணுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

"தம்பி நான் மானிப்பாய்க்குப் போறதுக்கு...ஒழுங்கு செய்யி றீங்களா .."

"எங்களோடை நிக்கப் பயமாயிருக்கா..."

"அப்படியில்லை..."

"ஜெயந்தன்...இவரைக் கொண்டுபோய் மானிப்பாயிலை விட்டிட்டு வாறீங்களா" தலைமைதாங்கி நிற்கும் வாலிபன் இன்னொரு வாலிபனிடம் கூறுகிறான். ஜெயந்தன் என்ற அந்த வாலிபன் ஆஸ்பத்திரி வாசல் மரத்தோடு நின்ற மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்படுகின்றான்.

"அண்ணன் கவனமாய் போங்கோ..."

"தம்பி... நான் உங்களை எங்கை சந்திக்கிறது" ஏதோ ஒரு ஆவலில் செல்லப்பா கேட்டு விட்டார்.

"ஏதாவது அலுவல் இருக்கா..."

"அப்படி ஒண்டும் இல்லை.. இவ்வளவு தூரம் உதவி செய்யிறியள்... அதாலை தான்..."

"...எங்கடை எதிரியள் எங்கை நிக்கினமோ அங்கை தான் நாங்கள் நிற்பம்..." சிரித்தபடி அவன் கூறுகின்றான்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்புலன்ஸ்' வான் ஒன்று மிகவும் வேகமாக வருகின்றது. ஆஸ்பத்திரியின் பிரதான கேற் திறக்கப்பட வான் உள்ளே செல்கின்றது.

''அண்ணன் கொஞ்சம் பொறுத்துப் போவமா...'' மோட்டார் சைக்கிள் வாலிபன் செல்லப்பாவிடம் கேட்கின்ருன்.

செல்லப்பாவின் பதிலுக்காக அவன் காத்திருக்கவில்லை. மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, ஆஸ்பத்திரிக்குள்ளே செல்கின்ருன்.

செல்லப்பாவும் அவர்களைப் பின் தொடர்கிருர்.

அம்புலன்ஸ் வானை விட்டு சாரதி இறங்குகின்ருன். அந்தச் சாரதியும் இங்கு நின்ற வாலிபர்களைப் போலவே காட்சியளிக்கின்ருன்.

ஆஸ்பத்திரிகளில் கடமையில் ஈடுபடுத்தப்படும் வானுக்கும், இந்த வானுக்கும் எந்த வேறுபாடும் இல்லை.

'அம்புலன்ஸ் வான்' சேவையையும் பொடியள் தான் நடத்துகிருர்களா...?

வானின் பின் பக்கத்துக் கதவு திறக்கப்பட்டு ஒருவரின் உடல் இறக்கப்படுகிறது.

அந்த மனிதன் இரத்தத்தில் தோய்ந்து போய் கிடக்கின்ருன். வயிற்றிலும், நெஞ்சுப்பக்கத்திலும் குண்டு துளைத்த காயம் தெரிகின்றது.

''எங்கை நடந்தது...?''

''பலாலியிலை...''

''என்ன நடந்தது...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆமிக்காறரர் வெளிக்கிடப்பாத்தவங்கள். அவங்களைத் தடுக் கிறதுக்காக எதிர்த் தாக்குதல் நடத்திக் கொண்டு நிக்க யிக்கை, ஹெலியிலே வந்தவங்கள் சுட்டுப் போட்டாங்கள்...''

அங்கு நின்ற இரு வாலிபர்களிடையே நடந்த சம்பாஷணையை செல்லப்பாவும் கேட்கிருர்.

சூடுபட்ட மனிதன்—

எங்கடை 'பொடியன்'... செல்லப்பாவின் மனம் தீர்மானிக் கின்றது.

ஆஸ்பத்திரியில்– அவசர சிகிச்சை நிலையத்தில் அந்த வாலிபன் கிடத்தப்பட்டுக் கிடக்கிறுன்.

சில நிமிடங்கள்தான்......

சறம், ஷேர்ட்டுடன் சில ஆண்கள்—

இரவு அங்கிகளுடன் சில பெண்கள்—

வந்து நுழைகின்றனர். அங்கு நின்ற வாலிபர்கள் விலகி இடம் கொடுக்கின்றனர்.

வந்தவர்கள்......?

அத்தனை பேரும் டாக்டர்கள்!

டாக்டரின் வேலை—

சாதாரண கூலியாளின் வேலை.

நேர்ஸ்மாரின் வேலை...... சகலதையும் அவர்களே செய்கின் றனர். எவ்வளவு துரிதமாகவும், நுணுக்கமாகவும் அவர்கள் செய்கின்றனர்......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு போராளியைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற துடிப்பு... அந்த வாலிபனின் உயிர் சிறுகச் சிறுக 'கல்லறையை' நோக்கிச் சென்று கொண்டிருப்பதைச் சகலரும் உணர்கின்றனர். இருந்தாலும் அந்த டாக்டர்கள் தங்கள் நம்பிக்கையை இழந்து விடவில்லை!

ஆண்களோடு சரிநிகராக பெண் டாக்டர்கள்; மிகவும் வயதில் குறைந்தவர்கள்...!

செல்லப்பா வாலிபனாக இருந்த போது நடந்த ஒரு சம்பவம் அவருக்கிப்போது நினைவுக்கு வருகிறது—

அப்போது, இந்த ஆஸ்பத்திரியில் இப்போது கட்டப்பட்டிருக்கும் முன் பக்க மண்டபம் கட்டப்படவில்லை.

மணிக் கூட்டுக் கோபுரவிதி பிரதான வீதியில் சந்திக்கின்ற சந்திக்கு எதிராகவே ஆஸ்பத்திரியின் பிரதான வாசல் இருந்தது.

செல்லப்பாவின் தகப்பனுக்கும், இன்னும் சிலருக்கும் ஏற்பட்ட கைகலப்பில், செல்லப்பாவின் தகப்பன் காயப்பட்டு விட்டார். இரவு பத்து மணியிருக்கும்;

செல்லப்பா தகப்பனை இங்கு கொண்டு வந்தான். விடியும்வரை ஒரு டாக்டர் கூட வரவில்லை.

டாக்டர்களுக்குப் பதிலாக பொலிஸார் மட்டும் வாக்கு மூலம் எடுத்துக் கொண்டு நின்றனர்.

அதன் பின்பு,

செல்லப்பா தனக்குத் தெரிந்த ஒருவரிடம் போய் அவரைக் கொண்டு வந்து அவர் மூலம் டாக்டரிடம் போய் அதன்பின்பு தான் வைத்தியம் செய்யப்பட்டது.

இன்று—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே டாக்டர்கள் உடுத்த உடுப்புடன் ஓடிவந்து நிற்கின்றனர்......!

அங்கு கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒரு பெண் டாக்டர் அந்த வாலிபனைப்பற்றிய விபரங்கள் எழுதப்பட்ட பத்திரத்தை எடுத்துப் பார்க்கின்றார் ''வேதக்காறப் பொடியன்'' அவள் வாய் முணுமுணுக்கின்றது.

'சிலுவைராசா' இதுதான் அவனது பெயர்.

சில விஞடிகள் ஏதோ சிந்தித்த அந்தப் பெண் டாக்டர் அங்கிருந்து செல்கிறாள். அவள் எங்கு செல்கிறாள், ஏன் செல்கிறாள் என்பது எவருக்குமே தெரியாது.

அந்த வாலிபனுக்கும் கல்லறைக்கும் இடையிலுள்ள தூரம் குறுகி கல்லறையோடு அந்த வாலிபனின் உயிர் சங்கமிக்கப் போகின்ற அறிகுறிகள்...!

அங்கு நின்ற வாலிபர்கள்... தங்கள் கைகளால் முகங்களைப் பொத்திக் கொண்டு நிற்கின்றனர்...!

போராளிகளின் தோற்றங்கள்தான் வன்மையானதே தவிர இதயங்கள் மென்மையானவை!... மென்மையான தென்றல்... மென்மையிலும் மென்மையானது ..!

சில விஞடிகளில் அந்தப் பெண்டாக்டர் திரும்பி வருகின்றார். அவரோடு ஒரு வயோதிபரும் வருகின்றார்.

ஒரு சாறம்— அரைக்கை பெனியன்— வழுக்கை விழுந்த தலை... தூக்க உணர்வுகளுக்கூடாக குத்தி நிற்கும் துக்க உணர்வு...!

அவரது கழுத்திலே- தடித்த கறுத்தக் கயிறு – அதில் மிகப் பெரிய சிலுவையில் அறையப்பட்ட யேசுவின் சிலை...!

''அவர் பாதிரியார்'' அந்தப் பெண் டாக்டர், அந்தப் புதியவரை அறிமுகஞ் செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வாலிபனின் இறுதிக் கடமைக்காக, ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு வந்து தங்கியிருந்த ஒரு பாதிரியாரை அந்த டாக்டர் அழைத்து வந்திருந்தார்.

அந்தப் பாதிரியார் கூட எந்த மறுப்புமின்றி வந்துவிட்டார். ஆண்டவனின் பிரதிநிதியான அந்தப் பாதிரியார், மூச்சுக்களை எண்ணிக் கொண்டு படுத்திருக்கும் அந்த வாலிபனின் முகத்தைக் கருணையோடு பார்ப்பது—ஆண்டவனே நேரில் வந்து பார்ப்பது போலிருக்கின்றது...

அவர் கண்கள் கலங்குகின்றன...!

முழந்தாளிட்டு அமர்ந்த பாதிரியார் கைகள் இரண்டையும் பக்கவாட்டில் நீட்டி, அந்த வாலிபனுக்காக இறைவனிடம் பிரார்த்திக்கின்றார்.

ஆயுதங்களைப் பிடித்ததனால் மரத்துப்போய்விட்ட அந்த வாலிபன் வலது கரத்தின் விரல்களை விரிக்கின்றார் பாதிரியார்— இரத்தக் குழம்பு— நிறைந்துபோய்க் கிடக்கின்றது.

விரிக்கப்பட்ட கைக்குள், தன் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த சிலுவையை வைக்கிறார்.

யேசுவின் சிலை குருதியினால் குளிப்பாட்டப்படுகின்றது...! சத்தியத்தை வென்றெடுப்பதற்காகச் சிந்தப்பட்ட புனிதமான இரத்தம்!

அந்த வாலிபனின் கையைத் தொட்டதனால், குருதி படிந்திருந்த தனது வலது கையினால்— அந்த வாலிபனை ஆசிர்வதிக்கின்றார்— பாதிரியார்.

வாலிபனின் ஆத்மா— கல்லறையோடு சங்கமிக்கின்றது.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு ஒருமணியிருக்கும்.

ஆஸ்பத்திரிக் கட்டிடத்தோடு இணைந்திருக்கும் 'நோயாளர் நலன்புரிச் சங்க' மண்டபத்துள் செல்லப்பா இருக்கின்ருர். அவரால் படுக்க முடியவில்லை.

அந்த வாலிபன் மரணித்ததைத் தொடர்ந்து செல்லப்பாவின் மானிப்பாய் பிரயாணம் நிறுத்திவைக்கப்பட்டது.

மரணித்த அந்த வாலிபனின் முகம், செல்லப்பாவின் மனதில் படிந்துபோய்விட்டது.

செல்லப்பாவின் மூத்த மகன் சுதர்சன் கிட்டத்தட்ட அவனது சாயலையே ஒத்திருப்பான்.

செல்லப்பா சிறைக்குச் சென்றபின் இரண்டு வருடங்கள் யாழ்ப்பாணம் கோட்டைச் சிறைச் சாலையில் இருந்திருக்கின்ருர். அப்போது தனது குடும்பத்தினரை அடிக்கடி பார்க்கக் கூடியதாக இருந்தது. அதன் பின் வெலிக்கடைக்கு மாற்றப் பட்டார்.

கடந்த மூன்று வருடங்களாக குடும்பத்தினர் எவரையுமே அவரால் சந்திக்க முடியவில்லை.

நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணங்களினுல், பார்வையாளரின் அனுமதிகள் மறுக்கப்பட்டதோடு இங்கிருந்து கொழும்புக்குச் செல்லுமளவிற்கு செல்லப்பா குடும்பத்தினர் தகுதி பெற்றிருக்கவில்லை.

'நடந்துபோனுல் என்ன' இப்படி எண்ணுகிருர் செல்லப்பா. தன்னிடமிருந்த சொப்பிங் பையுள் கையைவிட்டு வீடி தேடியவருக்கு வீடிக்கட்டு சுற்றிவரும் கடதாசி மட்டும் சிக்குகின்றது. முறுகண்டியில் வாங்கிய வீடிக்கட்டு இதுவரையில், அவரது மனவேக்காட்டிற்கு ஆறுதல் அளித்திருக்கின்றது... இப்போது...?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அண்ணே...'' வெளியில் யாரோ செல்லப்பாவை அழைக்கின்றனர். யாரென்பதை அவரால் புரியமுடியவில்லையே தவிர, பொடியன்தான் என்பதை அவர்மனம் தீர்மானித்துக் கொள்கின்றது— செல்லப்பா வெளியே வருகின்ருர்.

''மானிப்பாய்க்குப் போகவேண்டிய அலுவல் ஒன்றிருக்கு... உங்களையும் கொண்டுபோய் விடட்டாம்...''வந்த அந்த வாலிபன் கூறுகிருன்.

செல்லப்பாவுக்குப் பெரும் மனத்திருப்தி- செல்லப்பா 'சொப்பிங்பை'யை எடுத்துக் கொண்டு- மோட்டார் சைக்கிளின் பின்புறத்தில் ஏறுகிருர்.

ஆஸ்பத்திரியிலிருந்து புறப்பட்டவர்கள்; கஸ்தூரியார் வீதி வழியே வந்து, ஸ்ரான்லி ரோட்டில் மிதந்து, கே. கே. எஸ். வீதியைக் குறுக்கறுத்து- மானிப்பாய் வீதியில் சென்று கொண்டிருக்கின்றனர்.

''தம்பி...'' மோட்டார் சைக்கிளின் பின் சீற்றில் இருந்த செல்லப்பா அந்த வாலிபனின் காதுகளுக்குக் கிட்டவாய் நெருங்கிக் கேட்கிருர்.

''என்னண்ணன்...''

'ராத்திரி செத்த பொடியன்''' எந்த ஊரைச் சேர்ந்தவன்...''
''உங்கடை ஊர்தான்...''

'சிலவேளை என்ரை மோன்தானே' இப்படி ஒரு எண்ணம்- அவரது மனதை திரும்பவும் குத்துகின்றது.

செல்லப்பாவின் மூத்த மகன் சுதர்சன் ஒரு பட்டதாரி; 'அவன் திருமணமாகி வசதியான வீடுவாசல்களோடு, குடியும் குடித்தனமுமாக இருப்பான், ராத்திரி இறந்துபோனது நிச்சயமாக எனது மகனாக இருக்க முடியாது...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு வருஷங்களுக்குமுன் ஒரு பட்டதாரியின் வாழ்க்கை எப்படியெல்லாம் அமைந்ததோ அதே பாணியில் தான் செல்லப்பா இந்த முடிவுக்கு வருகின்றார்.

பல்கலை கழகத்திற்கு தெரிவான உடனேயே கலியாணப் பேச்சு, பல்கலைக்கழகத்தால் வெளியேறியவுடன் கலியாண எழுத்து; உத்தியோகம் கிடைத்தவுடன் கலியாணம்...

நன்கொடையாகவும், சீதனமாகவும் பல தொகைப்பணம்... வீடு, காணி, நகை, முடிந்தால் ஒரு வாகனம் – வாகனத்தைத் தாமதித்தும் வாங்கிக் கொடுக்கலாம்...

''தம்பி... செத்த பொடியன்ரை பேர் தெரியுமா...''

'... 'வாஞ்சி' எண்டுதான் சொல்றனுங்கள் அவற்றை உண்மையான பெயர் தெரியவில்லை......''

சூடுபட்டு, இரத்தம் ஊறி விகாரப்பட்டுப்போன அந்த வாலிபனின் முகத்தைத் திரும்பவும் தனது மனதில் நினைவுபடுத்த முயற்சிக்கிறார் செல்லப்பா—

பெற்றவனால், பிள்ளையை இனங்கண்டு கொள்ள முடியாமல் இருக்கின்ற அவலம்!

இவர்களுக்குள் ஏற்பட்ட பிரிவு, அந்த வாலிபனின் களங்கப்பட்டுப்போன முகம், மனப்பதற்றம்... என்பவைகளால் அந்த வாலிபனைப் பற்றி செல்லப்பாவால் தீர்மானிக்க முடியாமல் போய் விட்டது.

* * *

அந்த வாலிபனிடம் அவர்கண்ட பருத்த தலையும் வட்டக்கண்களும்தான் அவருக்கு ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

''அந்தப் பொடியன்ரை உடல் எங்கை...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''...அவன்ரை வீட்டுக்காறட்டைக் குடுத்திட்டம்...''

''...வீடு எவடத்திலே...''

''...மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்திலே யுள்ள ஒழுங்கையுக்கை...'' இப்போது செல்லப்பாவின் மனம் ஒரு தீர்மானத்திற்கு வருகின்றது.

'இறந்துபோனது எனது மகனல்ல'

''அண்ணன்... மருதடிப்பிள்ளையார் கோயிலுக்கு கிட்டவா உங்கடைவீடு...''

''மருதடிப்பிள்ளையார் கோயிலுக்கு அங்காலே போகவேணும்... நான் நடந்துபோவன்... பிள்ளையார் கோயிலடியில் இறக்கி விடுங்கோ...''

சில நிமிடங்களில் மருதடிப்பிள்ளையார் கோவிலடியில் மோட்டார் சைக்கிள் நிறுத்தப்படுகின்றது.

மருதடிப்பிள்ளையார் கோவில்

எட்டுவருடங்களுக்கு முன்

''...பாலர் வகுப்பு மேசைகளால் ஆக்கப்பட்ட மேடையில், பெற்ரோல்மாக்ஸ் வெளிச்சத்தில் ஒருசில வாலிபர்களோடு... செல்லப்பா கூட்டம் நடாத்திய இடம்.

ஒரு வீட்டுக்கு ஒருவர்கூட கூட்டத்திற்கு வரவில்லை!

சில விநாடிகள் செல்லப்பாவின் சிந்தனை பின்னோக்கி விரைந்து... திரும்புகின்றது.

''...நீங்கள் இப்ப அந்தப் பொடியன்ரை வீட்டைதான் போறீங்களா...'' செல்லப்பா கேட்கிறார்.

ஓம்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''...நானும் அங்கை வரலாமா...''

''தாராளமாக வரலாம்...''

இவர்கள் பேசிக்கொண்டு நிற்கும்போது இன்னெரு மோட்டார் சைக்கிளில் இரண்டு வாலிபர்கள் வருகின்றனர்.

''நோட்டீஸ் வேலை முடிஞ்சிதா...''

''முடிஞ்சிது...'' இப்படிக் கூறியவன் சுருட்டி வைத்திருந்த ஒரு நோட்டீசை விரித்துக் காட்டுகிறுன்.

மிகப்பெருமளவிலான நோட்டீஸ் —

எவ்வளவு துரிதமாக பதிப்பித்துவிட்டார்கள்.

இறந்துபோன வாலிபனின் பெயருக்கு முன்னுல் அவனது பதவி போடப்பட்டிருக்கின்றது. மிகவும் உயர்ந்த பதவியில் அவன் இருந்திருக்கின்ருன்.

ஒரு'டிப்பர்' வான்வருகின்றது. அதற்குள் வாழைமரங்கள், தோரணங்கள் கறுப்புக் கொடிகள்... இருபதுக்கும் மேற்பட்ட வாலிபர்கள்...

ஒரு தியாகியின் இறுதியாத்திரைக்கான ஏற்பாடுகள்...' செல்லப்பாவின் மனம் குளிர்கின்றது...?

செல்லப்பாவும், அந்த வாலிபனும், இறந்துபோன வாலிபனின் வீட்டை அடைகின்றனர்.

அழகான ஒரு பெட்டிக்குள் அந்தத் தியாகியின் உடல் வைக்கப்பட்டிருக்கின்றது.

''அவர்கள்தான் அவனின் பெற்ருேர்'' இறந்துபோன வாலிபனின் பெற்ருேரை இன்னெருவன் செல்லப்பாவுக்கு இனங்காட்டுகிருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துக்கடைப் பரஞ்சோதி இவருக்கு மானிப்பாய், ஆனைக் கோட்டை, யாழ்ப்பாணம் இப்படிப்பல இடங்களில் மருந்துக் கடைகள் உண்டு.

மருதடிப் பிள்ளையார் கோவில் குருக்கள்

முன்னாள் மணியகாறன் — தவராசா

சிங்கப்பூர் பென்சனியர் அடைக்கலமுத்து

இப்பகுதிப் பிரமுகர்கள் சகலருமே ஒருமுகப்பட்டுநின்று செத்த வீட்டு அலுவல்களைக் கவனிக்கின்றனர். இவர்களெல்லாம் ஐக் கியப்பட்டு நிற்கும் அளவிற்கு... இந்த வாலிபன் யார்...?

அந்த வாலிபனின் பெற்றோரைத் திரும்பவும் பார்க்கின்றார் செல்லப்பா...

இதயத்தில் படிந்துபோயிருக்கும் முகங்களுக்குள் அவர்களை யாரென்று இனங்கண்டு கொள்ள முயற்சிக்கின்றார் செல் லப்பா...

''இந்தப் பொடியன்... சொர்ணத்துக்குச் சொந்தக்காறனே...'' அங்கு நின்ற ஒருவரிடம் கேட்கிறார்.

''ஓம்...''

''என்ன முறையிலை சொந்தம்...''

''...சொர்ணத்தின்ரை தாயும், இந்தப் பொடியன்ரை தகப் பன்ரை தாயும், கூடப்பிறந்த சகோதரங்கள்...''

அந்தவாலிபன் யாரென்ற விபரத்தை செல்லப்பா சந்தேக மின்றிப் புரிந்துகொள்கிறார்.

அவன்—

அவனது சமூகத்தவர்கள், தீண்டப்படக் கூடாதவர்களென ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்ந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள்...

''...அப்ப சின்னட்டியின்ரை மகனே...'' செல்லப்பா கேட்கின்ருர்.

''ஓமோம்... சின்னட்டியின்ரை மோன்தான்... வாட்டசாட்டமான பொடியன், வலு கெட்டிக்காறன்... அநியாயமாய்ப் போச்சு...''

சின்னட்டி...

இவர், செல்லப்பாவின் பாடசாலை நண்பர்.

செல்லப்பாவும் சின்னட்டியும் பாலர் வகுப்பிலிருந்து ஒன்ருகவே படித்தனர். மிகவும் கெட்டிக்காரன் வகுப்பில் பின் வாங்கிலேயே எப்போதும் இருப்பான்... அவன் சிலவேளைகளில் முன் வாங்கில் ,இருந்துவிட்டால்... தம்பிப்பிள்ளை வாத்தியார் தடியால் தள்ளிக்கொண்டு சென்று பின் வாங்கில் இருக்க விடுவார்... தம்பிப்பிள்ளை வாத்தியார் மட்டுமா... சுப்பையா வாத்தியார், குமரவேலு வாத்தியார்... இவர்களும் இப்படித் தான் செய்வார்கள்...!

அப்போது நாங்கள் ஐந்தாம் வகுப்பு-

அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற பால்மா கரைக்கப்பட்டு மதிய போசனத்தின் போது மாணவர்களுக்கு வழங்கப்படுவது வழக்கம்.

எங்களுக்கு பித்தளைப் பேணி-

சின்னட்டிக்கும், அவனேடு சேர்ந்தவர்களுக்கும் கறள் பிடித்த தகரப் பேணி-

''இந்த கறள் பேணியிலை நான் குடிக்கமாட்டன், எனக்கும் பித்தளைப் பேணி வேணும்'' சின்னட்டி ஒருநாள் இப்படிக் கேட்டுவிட்டான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிப்பிள்ளை வாத்தியாரின் முகம் சிவந்து..., அவருக்கு வந்த கோவம்... சின்னட்டியை அதிபரின் அறைக்குள் பூட்டி வைத்து அடியடியென்று அடித்து வீட்டுக்குத் துரத்திவிட்டார். அதன்பின்பு சின்னட்டி பாடசாலைக்கு வரவில்லை.

அந்தச் சின்னட்டியின் மகன்தான் இந்த வாலிபன்!

மரண வீட்டு ஆரவாரத்தில் செல்லப்பாவை யாருமே அவதானிக்கவில்லை. மருந்துக்கடைப் பரஞ்சோதியர் செல்லப்பாவுக்கு அருகிலேயே நிற்கிறார்.

''மணியம்... தண்ணிச் செம்பை எடுத்துவா...''

மருந்துக்கடைப் பரஞ்சோதியர் எவ்வளவு உரிமையோடு கூறுகின்றார்.

தீண்டாமை செத்துவிட்டதா?

குசினிக்குள் சென்ற மணியம் செம்பைக் கொண்டுவந்து கொடுக்கின்றான். சர்வசாதாரணமாக தனது வீடுபோல் எந்தக் கூச்சமுமின்றி பரஞ்சோதியர் வாங்கிக் குடித்துவிட்டுச் செம்பைக் கொடுக்கின்றார்!

''நாளைக்கு வாற ஆக்களுக்கு எங்கடை வீட்டிலை சாப்பாடு ஒழுங்கு செய்யிறன்...'' முன்னாள் மணியகாறன் தவராசா பரஞ்சோதியருக்குக் கூறுகின்றார்.

செல்லப்பாவால் அந்தச் சம்பவங்களை நம்ப முடியாமல் இருக்கின்றது...

அவரது கண்கள், அவரது செவிகள்... நம்பாமல் இருக்க முடியுமா...?

செல்லப்பா அங்கிருந்து புறப்படுகின்றார்.

சில மணித்தியால இடைவெயில் அவர் கண்ட மாற்றங்கள்- 'அரந் தாளாகி' அவரது இதயத்தை தேய்க்கின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

செல்லப்பா அங்கிருந்து புறப்படுகின்றார்.

எட்டு வருடங்களாக வெளியுலகத் தொடர்பின்றி – செக்கு மாட்டுவாழ்க்கையை வாழ்ந்தவர் - சில மணித்தியாலங்களில் கண்டுவிட்ட சம்பவங்களால் தாக்கப்பட்டு...... மிகப்பெரிய தொரு கேள்விக்குறி அவரது மனத்தில் கனக்கின்றது!

விநாடிக்கு விநாடி மாற்றம் அடைந்து கொண்டிருக்கும் இந்தச் சமுதாய சுழற்சியில், மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்பதையும் செல்லப்பா உணராதவரல்ல!

இந்தப்பகுதியில் - மேடையமைத்து மாற்றத்தைப் பற்றிய கருத்தை விதைத்த முதல்மனிதரே செல்லப்பா தான்!

மலையின் உச்சியில் ஊற்றெடுக்கின்ற ஆற்றுநீர் - என்றும் முன்னோக்கிப் பாய்ந்து கொண்டிருக்குமே தவிர, திரும்பிச் சென்று ஊற்றுக்கண்ணுக்குள் அடங்கிப்போவதில்லை......

பிள்ளையார் கோவிலடிக்கு வந்த அவர் சில நிமிடங்கள் தரித்து நிற்கிறார்......

பாலர்வகுப்பு மேசையில் செய்யப்பட்ட மேடை, 'பெற்றோமாக்ஸ்' வெளிச்சம்......பத்தோபதினைந்து பார்வையாளர்கள்...

என்னைமட்டுந்தான் அவர்களால் தடுத்துவைக்க முடிந்தது......

கருத்துக்களை அவர்களால் தடுத்து வைக்க முடியவில்லை......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டநெட்டுயிர்ப்போடு நடக்க ஆரம்பிக்கின்றார்.

மானிப்பாய் சந்தியில் –

பாடசாலைகளில் உபயோகிக்கப்படுகின்ற கரும்பலகைகள் போல் இரண்டு கரும்பலகைகள். பாடசாலையில் உள்ளவைகள் பலகையில் செய்யப்பட்டிருக்கும், இவைகள் சீமெந்தினால் கட்டப்பட்டு-மின்சார இணைப்பும் செய்யப்பட்டுள்ளது.

ஒன்றில் 'காலைச்செய்தி' என்ற தலைப்பின் கீழ் சில விபரங்கள் எழுதப்பட்டுள்ளன.

இரண்டாவதில் - 'மாலைச்செய்தி' என்ற தலைப்பின் கீழ் சில விபரங்கள் எழுதப்பட்டுள்ளன—

'காலைச்செய்தி' என்ற தலைப்பின் கீழ் - மரணித்த அந்த வாலிபனின் பெயர் விபரங்களும் மரணம் தொடர்பான சம்பவ விபரங்களும் எழுதப்பட்டுள்ளன.

மக்களுக்கு செய்தியை இலவசமாகக் கொடுக்கின்றனர்.

தாமதமின்றி கொடுக்கின்றனர்.

செல்லப்பா வாலிபனாக இருந்த காலத்தில் சாதாரணமாக ஒரு நோட்டீஸ் ஒட்டுவதற்குப்பட்டபாடுகளைஎண்ணிச்சிரிக்கின்றார்.

சாறத்தை மடித்துக் கட்டிக்கொண்டு, மானிப்பாய் சந்தியிலிருந்து சண்டிலிப்பாய் வீதியில் நடக்கின்றார்.

சண்டிலிப்பாய் வீதியில் சென்றால் – பிரதான வீதியின் வலது பக்கமாக ஒரு கல்விநிலையத்தைக் காணலாம். இந்தக்கல்வி நிலையத்தோடு ஒரு வீதி அமைந்துள்ளது. இந்த வீதியை மண் ஒழுங்கையென்றோ கல்லுறோட்டென்றோ கூறிவிட முடியாது. இரண்டுக்கும் இடைப்பட்டதொருபாதை. இந்தப் பாதையில் சிறிது தூரம் சென்றால் ஒரு பனங்காணி - இந்தப் பனங்காணியூடாக ஒரு நடைபாதை - இப்பாதையின் முடிவில் கட்டப்பட்டு முடிக்கப்படாமல் இருக்கும் ஒரு வீட்டைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் செல்லப்பாவின் வீடு.

செல்லப்பா தனது வீட்டுவாசலுக்கு வந்துவிட்டார்.

வீட்டுப்படலை கட்டப்பட்டிருக்கின்றது.

வீட்டுக்குள் ஒளிகுறைந்த ஒரு மின்சார 'பல்ப்' எரிந்து கொண்டிருக்கின்றது.

''அற்புதம்......'' செல்லப்பாவின் மனைவியின் பெயர் அற்புதராணி 'அற்புதம்' என்று தான் செல்லப்பா செல்லமாக அழைப்பார்.

''ஆரது......''

''நான்தான் .....கதவைத்திற......''

அற்புதம் குரலுக்குரியவரை இனங்கண்டு கொண்டு விட்டாள். இருந்தாலும் ஒரு சந்தேகம்.

''ஆரது...'' திரும்பவும் கேட்கின்றாள். அவளது கேள்வியில் அந்தரமும், அவசரமும் கலந்திருக்கின்றது.

''நான்தான்செல்லப்பா...கதவைத்திற......''

அற்புதத்தின் ஆத்மாவோடு கலந்த குரலின் ஒலி......!படலையின் உட்புறமாகக் கட்டப்பட்டிருந்த கயிற்றை அவிழ்ப்பதில் அற்புதம் பட்ட கஷ்டம்...அவலம்...

''அற்புதம் ..அவதிப்படாமல் ஆறுதலாக அவிழ்...''

அற்புதத்தின் உடலில் புதியதொரு பலம் – கயிற்றை இழுத்து அறுக்கின்றாள்—

தழும்புகளாகிவிட்ட கடந்தகால நினைவுகளின் இனிமை கலந்த வலிப்பு...மானசிகமாக ஒன்றையொன்று தழுவி நிற்கும் இரு ஆத்மாக்கள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதம் அழுது விட்டாள்—

செல்லப்பா பட்டும் படாமலும் அற்புதத்தை அணைத்துக் கொள்கிறார்......!

அற்புதத்திற்குத் தெரியாமல் செல்லப்பா தன் கண்களைத் துடைத்துக் கொள்கிறார்.

''இப்பதான் வாறீங்களா... இந்த நேரத்திலை எப்படி வந்தனீங்கள்...''

செல்லப்பா எதுவுமே பேசாமல் அற்புதத்தைப் பின் தொடர்கிறார்.

''சபே...சபே...அப்பா வந்திட்டார்... சபே உங்கடை அப்பா வந்திட்டார்...'' அற்புதம் ஆரவாரப்படுகின்றாள்.

'சபேசன்' இவன்தான் செல்லப்பாவின் கடைக்குட்டி. சபேசனை, சுருக்கி 'சபே' என்றுதான் வீட்டில் அழைக்கின்றனர்.

சபேசன் மூன்றுமாதக் கைக்குழந்தையாய் இருக்கும்போது தான் செல்லப்பா சிறைக்குச் சென்றார். அதன் பின் செல்லப்பா யாழ்ப்பாணம் கோட்டையில் இருந்த காலத்தில் இரண்டு தடவைகள் சபேசனைக் கொண்டு சென்றாள் அற்புதம் - அவ்வளவுதான்.

சபேசனுக்கு தகப்பனின் முகத்தைத் தெரியாது, செல்லப்பாவுக்கும் சபேசனின் முகத்தைத் தெரியாது.

சுற்றிவரக் கிழிந்துபோன ஒரு பாயில் சபேசன் சுருண்டுபோய்க் கிடக்கிறான், அசதியான தூக்கம்—

'சரியான பனி ..'' குறண்டிப்போய்க் கிடக்கும் சபேசனைப் பார்த்த செல்லப்பா கூறுகிறார்—

''போர்த்திவிட ஒண்டுமில்லை...என்ரை சீலைத்தலப்பாலை மூடிக் கொண்டு படுத்திருந்தனான்...'' செல்லப்பாவின் மன நிலையைப் புரிந்து கொண்டு பதில் கூறுகிறாள் அற்புதம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பா சப்பாணிகொட்டி அமர்ந்து—சபேயின் உடலை 'பாதாதிகேசம்வரை' வருடுகிறார்... செல்லப்பாவின் உள்ளமெல்லாம் குளிர்ந்து- வானத்திலிருந்து மழைத்துளிகள் விழுவதைப் போல்- அவரது கண்களிலிருந்து கண்ணீர் சொட்டுகள் விழுகின்றன!

"சபே... அப்பா வந்திருக்கிறார்" அற்புதம் சபேயைத்தட்டி எழுப்புகிறாள்-

"கிடக்கட்டும் எழுப்ப வேண்டாம்..." சபே இப்போது எழுந்திருக்கமாட்டான் என்பதை உணர்ந்துகொண்ட செல்லப்பா- அற்புதத்தை மறிக்கின்றார்.

தகப்பனின் உடலை ஸ்பரிசிக்காத மகனுக்கு பாசம் வருமா- அல்லது குரலைத்தான் விளங்குமா...?

சிறிது பருத்த தலை, அற்புதத்தின் கண்களைப்போல் பருத்த கண்கள், மெல்லிய உடல், இன்று முழுகியிருக்க வேண்டும். உச்சியிலும் கன்னப்புறங்களிலும் பவுடர் தேய்க்கப்பட்டிருந்தது- 'பாட்டா' வோடுதான் படுத்திருக்கின்றான். ஏனென்றால் ஒரு பாட்டா சுவர்க்கரையோடும், இன்னொரு பாட்டா அவனது காலடியிலும் கிடக்கின்றது.

அற்புதமும் அழுகிறாள்- சாதாரணமாகத்தான் அழத்தொடங்கினாள்... இவ்வளவு காலமும் தனிமையில் பிள்ளைகளோடு அவள் பட்ட அவல அனுபவங்களின் தொகுப்பின் தாக்கம்... உடுத்திருந்த சீலைத் தலைப்பினால் வாயைப் பொத்திக்கொண்டு குரல் வைத்து அழுகின்றாள்.

துயரம் கலந்த ஆனந்தக் கண்ணீர்!

"நான்தான் வந்திட்டனே அற்புதம்..." செல்லப்பா அற்புதத்தைச் சமாதானப்படுத்துகின்றார்.

"சபே... படிக்கப் போறவன..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போறவன்..."

"என்னைக் கேக்கிறவனே..."

"கேக்கிறவன்..." வெளிநாட்டுக்குப் போய்வரும் தகப்பன் தன் பிள்ளைகளுக்காக எவ்வளவு பொருட்களைக் கொண்டு வருவான்- சிறைக்குச் சென்ற செல்லப்பா- தனது பிள்ளைகளுக்காகக் கொண்டுவந்திருப்பது-

முறுகண்டியில் ஒரு ரூபாவுக்கு வாங்கிய கச்சான் பைக்கற்-

"என்ன அற்புதம் இப்பிடி எலும்புந் தோலுமாய்..." திடீரென்று பேச்சைத் திசை திருப்பி- அற்புதத்தைப் பற்றிக் கேட்கிறார்-

"எனக்கென்ன... நான் நல்லாய்த்தானே இருக்கிறன்..."

"உங்களுக்கெண்டு என்னத்தை சேர்த்துவைச்சிட்டுப் போனனான்..."

"...இண்டைக்குக் காலமை ஒரு காகம், குசினி முகட்டிலை இருந்து கத்திச்சிது .. ஆரோ வரப் போகினம் எண்டு யோசிச்சன்..."

அற்புதத்தின் பேச்சைக் கேட்டுக் கொண்டே வீடு முழுவதும் தன் பார்வையைச் செலுத்திவிடுகிறார் செல்லப்பா-

மூத்தவன்— சுதர்ஷன்

அடுத்தவள்— ஷர்மிளா

அவர்களைத்தான் செல்லப்பா தேடுகிறார்

"புள்ளையளைக் காணயில்லை..."

"வெளியிலை போனவை என்னும் வரயில்லை... யாழ்ப்பாணத்திலை ஒரு பொடியன் செத்துப் போனானாம்... மானிப்பாய் பொடியனாம்... சிலவேளை நாளைக்கு வருவினம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பா கேள்விக்குறியோடு- கண்களைக்கூசி அற்புதத்தைப் பார்க்கின்றார்- கடந்த சில மணித்தியாலங்களில் அவர் பெற்றுவிட்ட அனுபவம்..

செல்லப்பாவின் கேள்வியைப் புரிந்துகொண்ட அற்புதம் தலையைக் குனிந்து- மௌனியாகி- அவரது கேள்விக்குரிய பதிலை- மௌன மொழியில் கூறுகிறாள்!

''ஷர்மிளாவுமா...''

அற்புதம் தலையை மட்டும் அசைக்கின்றாள்.

''சுதர்ஷன் எங்கை வேலை செய்யிறான்...'' பட்டதாரியான சுதர்ஷன் நிச்சயமாக உத்தியோகத்திலிருப்பானென செல்லப்பா எதிர் பார்த்தார்.

''எத்தனையோ வேலையள் வந்தது... போக மறுத்திட்டான்... தியேட்டர்கார வல்லிபுரம் வந்து தன்ரை மோளைக் கட்டச் சொல்லி ஒற்றைக்காலிலை நிண்டவர்... கட்டினால் வெளிநாட்டுக்கு அனுப்புறனெண்டும் சொன்னவர்... அவன் ஒண்டுக்கும் சம்மதிக்கயில்லை...''

யாழ்ப்பாணத்து மண்ணில்- ஒரு பட்டதாரிக்கு இருக்கவேண்டிய பண்புகள்... அவைகளிற் கூட மாற்றமா......?

'ஷர்மிளா... யூனிவெசிற்றிக்குப் போனவளா...''

'எடுபட்டவள் போக மறுத்திட்டாள்...''

''ஏன்...''

''அது, பெரிய புத்திக்காறர் வாழ்ற ஒரு உலகமாம்... அங்கையுள்ளவை புத்தகங்களோடை தான் புரட்சி செய்வினமாம்... அந்த இடத்துக்குப் போகக் கூடாதெண்டு சொன்னாள்...'' ஷர்மிளா கூறிய அதே வார்த்தைகளில் கூறிவிட அற்புதத்தால் முடியவில்லை- தனக்குத்தெரிந்தளவில்-தெரிந்த மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் அவள் கூறிமுடிக்கின்ருள். அவள் கூறிய வற்றை செல்லப்பா உணர்ந்து கொள்கிருர். செல்லப்பா எத்தனையோ தத்துவப் புத்தகங்களைக் கரைத்துக் குடித்தவர் 'அதி புத்திஜீவிகளான பல்கலைக்கழக வாசிகளின் புரட்சி, புத்தகங்களோடு மட்டும்தான் நடைபெறுகின்றது' என்றே ஒருநாள் செல்லப்பா படித்திருக்கின்ருர்.

அதைத்தான் ஷர்மிளாவும் கூறியிருக்கின்ருள் என்பதை செல்லப்பா புரிந்து கொண்டுவிட்டார்.

இவ்வளவு தூரம் கதைக்குமளவிற்கு ஷர்மிளா சிந்தனையில் வளர்ந்து விட்டாளா' என்பதை எண்ணி செல்லப்பா ஆச்சரியப்படுகின்ருர்.

''சுதர்ஷனை எப்பிடி படிப்பிக்கமுடிஞ்சிது...''

''...சடையப்பம் செய்யிறதுக்கு வேண்டிய முதலும், பத்துக் கோழியும் 'பொடியள்' வாங்கித் தந்தவங்கள் சிலவேளை துரையற்றை மில்லுக்கு நெல்லவிக்கப் போறனான்... ஒரு மாதிரிச் சமாளிச்சதுதான்... இப்ப நாற்பது கோழியள் என்னட்டை நிக்கிது...''

''...உன்ரை புருஷனும் அப்பிடி... பிள்ளையளும் அப்பிடி... ஒரு தரோலையும் நிம்மதியில்லை...'' செல்லப்பா தன்னையும் தனது பிள்ளைகளையும் குறிப்பிட்டுக் கூறுகின்ருர்.

''ஊரோடை ஒத்துத்தானே போகவேணும்...''

''ஊரும்... உலகமும்...'' செல்லப்பா கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த போதும் யாழ்ப்பாணம் கோட்டையில் இருந்தபோதும்- இந்த ஊர் மக்களால் புறக்கணிக்கப் பட்டிருந்த சம்பவத்தை அவரால் ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றது.

செல்லப்பா விளக்க மறியலில் இருந்தபோது- சில தினங்களில் அற்புதம் பஸ்ஸுக்குக் காசில்லாமல் நடந்து சென்றிருக்கின்ருள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...வெறும் புட்டும் முருங்கையிலைச் சொதியும் கொண்டு போயிருக்கின்றாள்..

''தோட்டைக்கூட வித்துவிட்டு வெறுங்காதோடு வந்திருக்கின்றாள்.''

...அப்போது சபே மூன்று மாதக் குழந்தை. அந்தப் பாலனுக்கு பால்மா முடிந்துவிட்டது. அற்புதத்தின் உடலிலும் பாலில்லை... சபே பசியால் அடம்பிடித்து அழுதான்... சிலமணித்தியாலங்களுக்கு முன் இறுதியாக பால் கரைத்த பேணியின் அடியில் படிந்திருந்த மண்டி- அதற்குள் சுடுநீரை விட்டுக் கரைத்து வெள்ளை நிறத்தண்ணியாக சபேக்குப் பருக்கிய சம்பவங்களும் நடந்திருக்கின்றன!

இவைகள் செல்லப்பாவின் இதயத்தில் தழும்புகளாகிவிட்டன. அதன் பிரதிபலிப்பு...

அவர் ஊர் உலகத்தை வெறுக்கிறார்!

''இந்த உலகத்திலை... உண்மைக்கும், நீதிக்கும் இடமில்லை...''

மிகவும் வெறுப்போடு செல்லப்பா கூறுகிறார்.

செல்லப்பா எட்டு வருஷங்களுக்கு முன் வாழ்ந்த அதே உணர்வு நிலையில் நின்று பேசுகின்றார் அவர் கடந்த எட்டு வருஷங்களாக வாழ்ந்த உலகம்... ...மயானபூமி!... மயான பூமியில் சமுதாயவியாபகமான சிந்தனைகள் பிறக்குமா?...

''இவள் ஷர்மிளா கூட... உன்னைத் தனியவிட்டிட்டுப் போயிருக்கிறாளே...''

'மனித உயிர்களின் நெடில் நிறைந்த இந்தப் பூமியைசெல்லப்பா இனிமேல் தான் உணர வேண்டும்!

அற்புதம் குசினிக்குள் செல்கிறாள்-

''...அற்புதம் நான் சாப்பிட்டிட்டுத்தான் வந்தனான்...''

''எங்கை சாப்பிட்டனீங்கள்...''

''ரவுணிலை...''

அற்புதம் தேநீர் வைக்கின்றாள்-

செல்லப்பா, சபேயைப் பார்த்தபடி அமர்ந்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

விடிகிறது.

செல்லப்பாவைச் சந்திக்க சிலர் வந்தனர். சந்திக்க வந்தவர்களும், செல்லப்பாவின் சுகத்தை விசாரித்ததைவிட இறந்து போன அந்த வாலிபனைப் பற்றியே பேசிக்கொண்டனர்.

செல்லப்பா ஆறு மணிக்கு முன் குளித்துவிட்டு தன்னைச் சந்திக்க வருபவர்களுக்குப் பதில் கூற ஆயத்தமாக இருந்தார்.

ஓரிரு நாட்களா... எட்டு வருஷங்கள்...

அவர் எதிர்பார்த்தளவிற்கு சனங்கள் கூடவில்லை... ஏதோ இரத்த உறவோடு தொடர்புடைய சிலரே வந்து போயினர்....

இப்போது சிறைக்குச் செல்லாதவர்களே பார்வைக்குரியவர்கள் சிறைக்குச் சென்றவர்கள் பார்வைக்குரியவர்களல்ல...!

இப்போது சகலரும் சிறைக்குச் செல்லவும் இறக்கவும் தயாராக இருக்கின்றனர்.

செல்லப்பா பாவம்... தான் விட்டுச் சென்ற சமுதாய அமைப்பிலிருந்தே தனது சிந்தனையைத் தொடர்கின்றார்.

ஏழு மணியளவில் சபே எழும்புகிறான். அற்புதம் அழைத்து வந்து செல்லப்பாவிடம் விடுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டிலிருந்து வந்திட்டார்... இப்படித்தான் அற்புதம் கூறினள்.

செல்லப்பா தூக்கி அணைத்து முருகண்டியில் வாங்கிய கச்சான் பையைக் கொடுத்துச் சமாளித்துக் கொள்கிறார்.

"அற்புதம்..."

"என்னங்க..."

"...உவன் காந்தன் எங்கை..." செல்லப்பா வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரனான காந்தனை விசாரிக்கிறார்.

"காந்தனைத் தாட்ட இடத்திலை புல்லும் முளைச்சிட்டுது..."

'ஏன் ...என்ன நடந்தது ..' செல்லப்பா அதிர்ந்து போய் விட்டார்.

'ரவுணில சுட்டவங்கள்' செல்லப்பாவின் மனம் காந்தனுக்காக வருத்தப்படுகின்றது.

"யோகர், றெக்கோ, புவனேஸ்வரன், தவம்...எல்லாரும் பூசாவிலை...'

'... ... ... ... ... ... ... ... ...'

"... எங்கடை கோயில் சுவாமியாரை கோயிலுக்கை வைச்சுச் சுட்டவங்கள்..."

"........................."

"...... வீரகேசரியிலை வேலை செய்த சந்திரன் லீவிலை வந்து நிற்கையிக்கை புடிச்சுக்கொண்டு போனவங்கள் இப்ப எங்கையெண்டு தெரியாதெண்டு சொல்றுங்களாம்......"

"......................"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''...உவன் மங்களம் புள்ளைப்பெத்து ஆஸ்பத்திரியிலை கிடந்த வாட்டுக்குமேலை 'ஷெல்' விழுந்து... புள்ளையும், தாயும் அந்த இடத்திலேயேசரி... பிரேதம்கூட எடுக்க முடியாமல்போச்சு...''

'... ... ... ... ... ...'

''...நீங்கள் வீடுவீடாய் காசு சேத்துக்கட்டின வாசிகசாலை...... இப்பதரைமட்டமாய் கிடக்கு......அதுக்குள்ளை பேப்பரிபாத்துக் கொண்டிருந்த பொடியளை வைச்சுப் பூட்டிப் போட்டுகுண்டு வெச்சவங்கள்......அவ்வளவு பொடியளும் சரி...''

அற்புதம் தொடர்ந்து கூறிக்கொண்டுபோகின்ருள்...செல்லப்பா மௌனமாக சகலதையும் கேட்டுக் கொண்டிருக்கிருர். அவரது செவிப்பறை அதிர்ந்து இரத்தம் வழிகின்றது.

இங்கு ஒரு 'யுத்தம்' நடந்து கொண்டிருப்பதை செல்லப்பா இப்போதுதான் உணர்கிருர்.

செல்லப்பா சகலதையும் யோசித்தபடி சப்பாணி கொட்டி அமர்ந்திருக்கின்ருர்- அவரது மடியில் அமர்ந்திருக்கும் சபேசன் கச்சானை உடைத்துச் சாப்பிடுகின்ருன்.

''சபேசன் நீங்கள் படிக்கப் போகவில்லையா'' சில நிமிடங்கள் மௌனமாக இருந்த செல்லப்பா கேட்கிருர்.

''இண்டைக்குப் பள்ளிக்குடம் இருக்காது'' மிகவும் தெளிவாகக் கூறுகின்ருன் சபேசன்.

''ஏன்...''

''... ஆரோ செத்ததாம்...''

''... ஆரோ செத்தால் பள்ளிக்குடம் இல்லாமல் போகுமா...''

'அப்படித்தான்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''— நீங்கள் வாருங்கோ நான் கொண்டுபோய் பள்ளிக்கூடத்திலை விட்டிட்டு வாறன்...''

''அம்மா பள்ளிக்குடம் போறதா...'' தாயிடம் கேட்கிறான்.

''போய்ப் பாத்திட்டு வாருங்கோவன்...''

சபேயைக் குளிக்கவைத்து– சாப்பாடு கொடுத்து உடுப்புப் போட்டு விடுகிறாள் அற்புதம். சபேயும், செல்லப்பாவும் வீட்டிலிருந்து புறப்படுகின்றனர் பனங்காணிக்குள் சென்று கொண்டிருக்கும் போதே- பிரதான வீதிக்கரையில் அமைந்துள்ள கல்வி நிலையத்தில் சோககீதம் இசைப்பது கேட்கின்றது. முன்பென்றால்-

பெரும்பான்மை இனத்தவர்களில் யாராவது தலைவர்கள் இறந்துவிட்டால், அல்லது அயல்நாட்டுத் தலைவர்கள் யாராவது இறந்துவிட்டால் மட்டும் வானொலியில் இந்த சோககீதம் ஒலிபரப்பப்படும்.

தேசியத் தலைவர்களுக்கே உரித்தாக இருந்துவந்த சோககீதம்... இன்று...?...!

சிந்தித்தபடியே நடந்த செல்லப்பா பிரதான வீதியை அடைகிறார்.

சந்தியில் — இறந்துபோன அந்த வாலிபனின் படத்தை வைத்து குத்துவிளக்கு கொளுத்தப்பட்டிருக்கின்றது... வீதி ஓரங்களில் வாழைமரங்கள்- தோரணங்கள்- கறுப்புக் கொடிகள்...

எத்தனையோ மக்கள் அந்த வாலிபனின் புகைப்படத்தைச் சூழ்ந்து நிற்கின்றனர்...

சில பெண்கள் அழுகின்றனர்...

செல்லப்பாவால் அந்தக் காட்சிகளை நம்பமுடியாமல் இருக்கின்றது... நம்பாமல் இருக்க முடியுமா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பாவின் இதயத்தில் ஊறிப்போயிருந்த வெறுப்புணர்வுகளுக்கு மத்தியில் முகைவிட்ட புதிய உணர்வு... கட்டவிழ்ந்து- இதழ்விரிவதற்கான அறிகுறிகள்...!

செல்லப்பாவோடு நடந்துவந்து கொண்டிருந்த சபே, தகப்பனிடமிருந்து விடுபட்டுக் கொண்டு படம் வைத்திருந்த இடத்தை நோக்கி ஓடியவன்- படத்துக்கு முன்னால் போய் நிற்கிறான்!

எவ்வளவு ஆவலோடு அந்தப்படத்தைப் பார்க்கின்றான்...!

காலை பத்துமணிக்கு பிரேத ஊர்வலம்.

பிற்பகல் நான்கு மணிக்கு அஞ்சலிக் கூட்டம் என்ற செய்தியை உள்ளடக்கிய விளம்பரங்கள் விநியோகிக்கப்படுகிறன.

மகனையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்ட செல்லப்பா பாடசாலையை அடைகிறார்.

பாடசாலையில்—

பாடசாலை முன்றலில் சகல மாணவர்களும்கு வகுப்பு ஒழுங்குபடி வரிசையாக நிற்கின்றனர்- அவர்களோடு ஆசிரியர்களும் நிற்கின்றனர்.

"...ஆசிரியர்களே, மாணவர்களே... அகால மரணமடைந்த அந்த வாலிபனின் தியாகத்திற்கு நாம் அனைவரும் தலைவணங்க வேண்டும்... அவனது உயிர், நமது பயணத்தை வளப்படுத்தும் உரம்..." இப்படியே தொடர்ந்து பேசி-

"...பாடசாலை இன்று நடைபெறாது... சகலரும் அவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த வரிசையாக அவரது வீட்டுக்குச் செல்வோம்..." என்று முடித்து- தலைமை ஆசிரியரே தலைமை தாங்கி- சகலரையும் அழைத்துச் செல்கின்றார்.

செல்லப்பாவின் இதயத்தில் கட்டவிழ்ந்த மொட்டில் சில இதழ்கள் விரிகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பாவின் தகப்பன் ஒரு ஆசிரியர். அப்போதெல்லாம் இப்படியான ஹர்த்தால் சம்பவங்கள் நடந்தால் வழக்கத்திற்கு முன்னதாகவே தகப்பன் பாடசாலைக்குச் சென்றுவிடுவார்.

வீடு வீடாகத் திரிந்து மாணவர்களை அழைத்துச் சென்று பாடசாலையை நடாத்தி- அன்றைய முறைப்பாட்டையும் கல்விக்கந்தோருக்கு அனுப்பி விடுவார்.

அன்றைய தினம் நிச்சயமாக கல்விக்கந்தோரிலிருந்து உயர் அதிகாரிகளும், பொலிசாரும் வருவார்கள். வராத ஆசிரியர்களிடமிருந்து காரணங்களும் கேட்கப்படும்... அன்றைய தினம் சகல திணைக்கள உயர் அதிகாரிகளும் பெரும் 'தர்பார்' நடத்தி முடித்து விடுவார்கள்!

செல்லப்பா மகனோடு அங்கிருந்து புறப்படுகின்றார். இடையிடையே, சிலரின் சுகம் விசாரிப்புக்கும் செல்லப்பா பதில் கூறிக் கொள்கிறார்.

பாடசாலையிருந்து வரும்போது அறிமுகமான வீடுகளை எட்டிப் பார்க்கிறார்- வயது போனவர்களையும், குழந்தைகளையும் தவிர, வேறொருவரும் இல்லை. விசாரித்ததில்-

சகலரும் பிரேத ஊர்வலத்துக்குச் சென்று விட்டதாகக் கூறினர்.

செல்லப்பா வீட்டுக்கு வருகின்றார்.

வீட்டில்-

சுதர்ஷனும், ஷர்மிளாவும் நிற்கின்றனர்.

செல்லப்பா, சுதர்ஷன், ஷர்மிளா மூவரும் அருகருகே நிற்கின்றனர்... ஒருவராலும் பேசமுடியவில்லை... உதடுகள் துடிக்கின்றன... ஆத்மாக்களின் ஒலியற்ற பேச்சு... கண்களில் கண்ணீர்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு பஸ் நிலையத்தில் சந்தித்த வாலிபர்களைப் போல்- இவர்களின் தோற்றமும் அமைந்திருக்கின்றது.

"ராத்திரி நான் வெரயுக்கை உங்கடை அம்மாவும், தம்பியும் தனியத்தான் படுத்திருந்தினம்... அற்புதம் உங்கடை வளர்ச்சிக்காக தன்ரை வாழ்க்கையை அர்ப்பணிச்சவள்..."

செல்லப்பா உணர்ச்சிவசப்பட்டுக் கதைக்கின்ருர்... குரல் தளதளக்கின்றது.

"இப்ப எல்லாரும் அனுதைகள்தானே... தனிமை, பிரிவு, மரணம் இதெல்லாம் இப்ப சர்வசாதாரணம்..." சுதர்சன் நிதானமாக கூறுகின்ருன்- தலை குனிந்தபடியே கூறுவது அவனது அடக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது-

"ஷர்மி... நீயாவது அம்மாவுக்குத் துணையாக இருக்கக் குடாதா..." ஷர்மிளாவை, 'ஷர்மி' என்றுதான் செல்லப்பா அழைப்பார்.

ஷர்மிளா மௌனமாக நிற்கிருள்.

செல்லப்பா ஷர்மிளாவின் கழுத்தைக் அவதானிக்கின்ருர்.

மாங்கல்யம் தாங்கியிருக்க வேண்டிய கழுத்தில்- கறுத்தக் கயிறு- அதில் ஒரு வெள்ளிக்கூடு...

அதே போன்ற ஒரு கறுப்புக் கயிறு சுதர்ஷனின் கழுத்திலும் தொங்குகின்றது.

கிறீஸ்தவர்கள் கறுப்புக் கயிற்றில் தங்கள் வணக்கத்துக்குரிய தெய்வங்களின் உருவங்களைக் கட்டித் தொங்க விட்டிருப்பது போல்...

இவர்கள்...

"கழுத்திலை கறுத்தைக் கயிறும்... கூடும்... கோயிலுக்கு ஏதாவது நேத்தி வைச்சிருக்கா..." செல்லப்பா ஷர்மிளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடம் கேட்கிறார். ஷர்மிளா, சுதர்ஷனைப் பார்க்கிறாள்- சுதர்ஷன் ஷர்மிளாவையும், செல்லப்பாவையும் மாறி மாறிப் பார்க்கிறான்.

''அப்பா... அது நஞ்சு...'' இவர்களின் பேச்சை அவதானித்துக் கொண்டு நின்ற சபே கூறுகின்றான்.

''நஞ்சா''

''ஓமப்பா...''

''...என்ன ஷர்மி... சபே சொல்லுறது உண்மையா...''

''உண்மைதான்...''

''...அற்புதம் இந்தப் புள்ளையளின்ரை வேலையைப் பாத்தியா... கழுத்திலே நஞ்சு... செல்லப்பா பதட்டப்படுகிறார்.

அற்புதம் சிரிக்கிறாள்.

''பொடியள் எல்லாற்றை கழுத்திலையும் உந்தக் கறுத்தைக் கயிறும் கூடும் கிடக்கு''

''ஏன்...''

''...அப்படித்தான்''

''என்ன சுதர்சன்...''

''உண்மைதானப்பா...''

''...என்ன காரணம்...''

''எங்கடை உயிரைப் பற்றி, எங்களுக்கு அக்கறையில்லை...

இழப்பதற்கு எதுவுமில்லை எண்டதை வெளிப்படுத்த...''

செல்லப்பா பெற்ற மூன்று பிள்ளைகளில் இருவர்...? எவ்வளவு பெரிய துணிவு?... வாலிப வயதில் ஏற்படுகின்ற இயல்பான உடல், உள உணர்வுகளையெல்லாம் தாண்டி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு அனுபவம் பெற்ற செல்லப்பா கூட இன்னும் தன்னைத் தியாகம் செய்துகொள்ளத் துணியவில்லை!

'நம்மவர்கள் மத்தியில் இப்படிப்பட்ட தியாகிகள் இதுவரையில் தோன்றியதில்லை... எத்தனையோ தியாகிகள் வாழ்ந்துதான் இருக்கின்றனர்... ஆனால், எவருமே தங்கள் மரணத்தை தங்கள் கழுத்தில் சுமந்து வாழ்ந்ததாக வரலாறில்லை... செல்லப்பாவின் சிந்தனை போராட்ட வரலாற்றில் ஊர்ந்து வருகின்றது.

"தம்பி ..." படலையில் யாரோ கூப்பிடுகின்றனர்.

"உள்ளை வாருங்கோ"

காளியப்பு படலையைத் திறந்துகொண்டு உள்ளே வருகின்றார். நடந்துவந்த களைப்பில் நிற்கமுடியாமல் – முற்றத்தில் குந்தியமர்கின்றார்.

"...நீ வந்திருக்கிறதாய் கேள்விப்பட்டன் பாத்திட்டுப் போகலாம் எண்டு வந்தன்..."

"சுகமாய் வந்து சேர்ந்திட்டன்... ஊரிலைதான் சரியான புதினங்கள் நடந்திருக்கு..." காளியப்புவோடு ஏதாவது பேச வேண்டும் என்பதற்காகப் பேசுகிறார் செல்லப்பா.

காளியப்பு கையில் ஒரு கடதாசிப்பை வைத்திருக்கின்றார்.

"தம்பி... செல்லப்பா... பிரேத ஊர்வலத்துக்குப் போறியா..."

காளியப்பு கேட்கிறார்.

"நான் போகயில்லை அப்பு..."

"...சுதர்சன் போறானே..."

"...போறன்..." சுதர்ஷனே பதில் கூறுகிறான்: சுதர்ஷன் போவான் என்பதும் செல்லப்பாவுக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''...என்னலை நடக்கேலாது தம்பி... இதுக்குள்ளை ஒரு மாலை கிடக்கு... அந்தப் பொடியனுக்குப் போட்டுவிடு...'' எவ்வளவு அக்கறையோடு காளியப்பு அந்த மலர் மாலையைக் கொடுக்கின்றர்.

இறந்துபோன வாலிபனுக்குத் தனது அஞ்சலியைச் செலுத்த வேண்டுமென்ற அந்த உயர்ந்த சிந்தனை... கடந்த இரவு பஸ் நிலையத்தில் சந்தித்த அந்தக் கிழவியின் முகம் அவருக்கு நினைவுக்கு வருகின்றது.

காளியப்பு இப்பகுதியில் மிகப்பிரபல்யமானவர். 'சவாரிக்கார காளியப்பு' இப்படித்தான் அவரை சகலரும் அழைப்பார்கள்.

சவாரிக்குப் பொருத்தமான மாடுகளைத் தெரிவது, வளர்ப்பது, சவாரி பழக்குவது, போட்டிகளில் கலந்து கொள்வது......இவைகளைவிட அவர் வேறெதையும் பற்றிச் சிந்திப்பதில்லை.

அப்படிப்பட்ட காளியப்பருக்குக்கூட சமுதாயஉணர்வு...போராளியைக் கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணம்!

காளியப்பு மிகப்பெரியதொரு கேள்விக் குறியாய் நிற்கிருர்......

''என்னடா தம்பி பாக்கிருய்... நான் இவ்வளவு காலமும் மாடுகளை வளர்த்தன்... சவாரி பழக்கினன்... ஆனல், நாங்களும் மாடுகளைப் போலைதான் வாழ்ந்திருக்கிறம் எண்டதை இப்பதான் உணர்றன்...

''...நாங்கள் முதல் மனிசராகவேணும்...'' காளியப்பு உணர்ச்சி வசப்பட்டுக் கதைக்கின்றர்;

மண்விளையாட்டிலிருந்து, மாடுவளர்ப்புவரை போராட்ட உணர்வின் வெளிப்பாடுகள்......!

காளியப்பு அங்கிருந்து செல்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சுதர்ஷன்'' வாசலில் யாரோ சில வாலிபர்கள் சுதர்ஷனை அழைக்கின்றனர். அவர்களது அழைப்பில் அவசரம் கலந்திருப்பதை செல்லப்பா உணர்கிறார்.

வந்தவர்களோடு சுதர்ஷன் கதைக்கின்றான். அவர்களுடைய பேச்சை செல்லப்பாவால் சரிவர புரிந்து கொள்ளமுடியவில்லை.

''அப்பா... நான் அவசியமாக போகவேண்டியிருக்கு...''

''எங்கை...''

''எங்கடை முகாமுக்கு...''

''என்ன விஷயம்...''

'' அவசியமான விஷயம்...'' அவர்களுக்கிடையிலுள்ள விஷயத்தை சுதர்ஷன் விபரமாகக் கூற விரும்பவில்லை என்பதை செல்லப்பா உணர்ந்து கொண்டு தொடர்ந்தும், அவ் விஷயம் பற்றி விசாரிக்காமல் விடுகின்றார்.

சுதர்ஷன்,ஷர்மிளாவுக்கு எதையோ இரகசியமாகக் கூறுகிறான்.

அவளது முகத்திலும் ஆச்சரியம் —

சில நிமிடங்களில் சுதர்ஷன், அங்கிருந்து செல்கின்றான்.

ஷர்மிளாவும் புறப்படுகின்றாள். செல்லப்பாவின் வேண்டுதலை மறுக்கமுடியாமல் தனது பயணத்தை நிறுத்திக் கொள்கிறாள்.

* * *

''மன்னாரில் நடந்த நேரடி மோதலில் பொடியளால் சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவத்தினர்களின் உடல்களையும், கைது செய்யப்பட்ட இராணுவத்தினரையும் யாழ்ப்பாணம் கொண்டு வந்திட்டாங்களாம்'' இச் செய்தி சிறுகச் சிறுக பரவி,சகலராலும் உச்சரிக்கப்படுமளவிற்கு வளர்ந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரில் நடந்த நேரடி மோதல்கள் பற்றி பேசப்பட்டதை இப்போது தான் செல்லப்பா யோசிக்கின்றார்.

வாலிபர்கள் வந்ததும், சுதர்ஷனோடு இரகசியமாகக் கதைத்ததும்... சுதர்ஷன் அவசியமாகப் புறப்பட்டுச் சென்றதும்...

'மன்னாரிலிருந்து இராணுவத்தினரின் உடல்கள் கொண்டுவரப் படுமாம்' என்ற செய்தியும் பேசப்பட்டது.

'பொடியள் எப்படியும் கொண்டு வந்திடுவங்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்தாலும், மன்னாருக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே எத்தனையோ இராணுவ முகாம்கள்... இத்தனை இராணுவமுகாம்களையும் தாண்டி கொண்டுவரமுடியுமா...? என்ற சந்தேகமும் மௌனியாகிவிடவில்லை!

இந்த நேரடி மோதலில் இறந்துபோன இரண்டு போராளிகளின் பெயர்களும் பேசப்படுகின்றன. அவர்களுக்கான மிகப் பெருமளவிலான விளம்பரங்கள்...

"நல்லூர் கோயில் பின்வீதியிலை சடலங்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்காம்..."

சில மணித்தியாலங்களின் பின் இப்படியொரு செய்தியும் பேசப்படுகின்றது.

வீட்டில் நின்ற கோலத்துடனே ஓட்டமும் நடையுமாக செல்பவர்கள்...பிள்ளைக்குப் பால் கொடுத்த குறையில் செல்பவர்கள்...அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த உலையை இறக்கி வைத்துவிட்டு செல்பவர்கள்...வீட்டு வேலைகளைக் குறையில் விட்டுச் செல்பவர்கள்...

செல்லப்பா தனது வீட்டுப்படலையில் நின்றபடி சகலதையும் அவதானிக்கின்றார்.

இதனால் என்னென்ன விபரீதங்கள் ஏற்படுமோ என்ற பயம் அவருக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதத்திற்கு தானும் போகவேண்டுமென்ற ஆசை இருந்தாலும்; அதை வெளிப்படையாகக் கேட்டுவிட முடியாமல் நிற்கின்றாள்...

"அம்மா நல்லூரடிக்கு நாங்களும் போவமா..." செல்லப்பாவின் கடைக்குட்டி அற்புதத்திடம் கேட்பது, செல்லப்பாவுக்குத் தெளிவாகக் கேட்கின்றது.

"அப்பாவிட்டைக்கேள்" அற்புதம் கூறுகிறாள்.

செல்லப்பா இவைகளைக் கேட்டும் கேட்காதவர்போல் மௌனமாக நிற்கின்றார்.

"அப்பா...நல்லூரடிக்குப் போவமா..." அந்தக் கடைக்குட்டி கேட்கின்றான்.

"அங்கை போகக் கூடாது..."

"ஏன்......"

"ஆமிக்காறர் வந்து சுட்டுப்போடுவங்கள்..." செல்லப்பா தனது மனதில் உள்ளதை அப்படியே கூறுகின்றார்.

"அங்கை பொடியள் நிப்பாங்கள்தானே... பிறகு எப்படி ஆமிக்காரர் வாறது..." அந்தக் கடைக்குட்டிதான் இப்படிக் கூறுகின்றான்.

செல்லப்பா எப்படியோ தனது மகனைச் சமாதானப்படுத்துகின்றார்.

பலாலி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, காரைநகர் நாவற்குழி, பருத்தித்துறை, வசாவிளான்... இப்படி எத்தனை இராணுவ முகாம்கள் இருக்கின்றன...... இத்தனை இராணுவ முகாம்களுக்கும் நடுவே...

இராணுவத்தினரின் உடல்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நிச்சயமாக இன்று ஏதாவது அட்டூழியம் நடக்கும்' செல்லப்பாவின் மனம் இப்படியொரு முடிவைக் கூறுகின்றது......

ஒன்பது இராணுவத்தினரின் உடல்களையும், உயிரோடு பிடிக்கப்பட்ட இரண்டு இராணுவத்தினரையும், ஆயுதங்களையும் தன் மனக் கண்ணால் பார்க்கின்றார் செல்லப்பா... அவரது உடலிலுள்ள அத்தனை நரம்புகளும் விறைத்து... மயிர்களெல்லாம் குத்திட்டு நிற்கின்றன!

இப்படியொரு சம்பவத்தை நம்மவர்கள் கற்பனை செய்திருப்பார்களா?

செல்லப்பா, தான் வாலிபனாக இருந்த காலத்தில் போராட்டம் நடத்த வேண்டும் என்று துடித்திருந்தாலும் இப்படியொரு சம்பவத்தைக் கற்பனை செய்ததில்லை...!

கற்பனை செய்யாத, செய்ய முடியாத அந்தச் சம்பவம் நடந்துவிட்டது.

நடத்தியவர்கள்...

நம்மவர்கள்...

செல்லப்பாவின் சிந்தனை நம்மவர்களின் போராட்ட வரலாற்று வளர்ச்சியில் ஊர்ந்து... அவரது இதயத்தில் அவரை அறியாமலேயே ஒரு நம்பிக்கைக் கீற்று பளிச்சிடுகின்றது.

''அற்புதம்...'' எதையோ நினைத்துக்கொண்டவராய் திடீரென்று அற்புதத்தை அழைக்கின்றார்.
''என்னங்க...''

'சுதர்ஷன் எப்ப வாறனெண்டவன்...''

''...வாறதைப் பற்றி சொல்லயில்லை...''

''சுதர்ஷன் இப்ப நல்லூரிலைதானே நிற்பான்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மனம் தீர்மானிக்கின்றது.

பனை மரங்களுக்குக்கூடாக, பிரதான வீதியில் கட்டப்பட்டிருக்கும் கறுப்புக்கொடி நன்முகத் தெரிகின்றது.

''அப்பா...'' பின்னல் நின்று ஷர்மிளா அழைக்கின்ருள். அவளது அழைப்பிலுள்ள உணர்வுக் கூர்கள் அவரது இதயத்தைக் குத்துகின்றன.... மகளின் அழைப்பைக் கேட்டுத் திரும்புகின்ருர்.

ஷர்மிளா நிற்கிருள் — அவளது கோலம், செல்லப்பாவை அதிர வைக்கின்றது...

ஆண்களைப் போல் உடையணிந்திருக்கின்ருள். ஒரே ஒரு பெண் பிள்ளை என்ற ஆசையில் தினசரி கீரைக்கறி சமைத்துக் கொடுத்து இயற்கையாக நீண்டு வளர்ந்த கூந்தல், அதை எப்படியோ மடித்துக் கட்டியிருக்கின்ருள். இடுப்பிலே மூன்று அங்குல அகலமானதொரு 'பெல்ட்' கட்டியிருக்கின்ருள்.

மிகவும் தடித்த சப்பாத்துக்கள்.

'வட்டக்கண்ணி' சிறுவயதில், ஷர்மிளாவின் அழகான கண்களைப் பார்த்து பலர் இப்படித்தான் அழைத்தனர். அந்தக் கண்களில்... விடுதலை உணர்வுமிக்க விகாரம்... அவரால் பார்க்க முடியாமல் இருக்கின்றது... வெறுமையான காதுகள்...

மாங்கல்யத்தைத் தாங்கவேண்டிய கழுத்தில்... மரணக்கூடு!... ஷர்மிளா முற்ருக மாறிப்போய் விட்டாள்.

போராட்ட உணர்வின் ஊடாக பாசஉணர்வு முரல்மீனை கிழித்து வருகின்றது.

''என்ன ஷர்மிளா திடீரென்று...''

'...அப்போதே நான் போயிருப்பன்... அண்ணனும் நானும் ஒரே நேரத்திலே வெளிக்கிட்டால் நீங்கள் வேதனைப்படுவியள் எண்டு அண்ணன் சொன்னவர்...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கட்டாயம் போகத்தான் வேணுமா...''

''...போகவேண்டாமெண்டு சொல்லுறியளா''

ஷர்மிளாவின் கேள்விக்குப் பதில் கூறமுடியாத செல்லப்பா, வலது கையால் தனது நெஞ்சைத் தடவுகின்றார்.

சகல சிந்தனைகளும் நெஞ்சுக்குள்ளேயே நிகழ்வதாகத்தானே கூறப்படுகின்றது. அதனால்தான் நெஞ்சைத்தடவி, ஆறுதலடையப் பார்க்கின்றார் செல்லப்பா!

செல்லப்பாவும், ஷர்மிளாவும் கதைத்துக்கொண்டு நிற்கின்றனர். அப்போது ஷர்மிளா வளர்க்கின்ற நாய் எப்படியோ ஷர்மிளாவின் பிரிவை ஊகித்துக்கொண்டு முன்னங்கால் இரண்டையும் உயர்த்தி ஆவலாதிப்படுகின்றது...

''நாய்க்குள்ள சிந்தனைகூட இந்த மனிதனுக்கு இல்லாமல் போட்டுது... இருந்திருந்தால் இவ்வளவும் நடக்குமா...''

நாயையும், தேசியத்தின் ''ஆசனப்பலகையில்'' இருப்பவர்களையும் ஒப்பிடுகின்றார் செல்லப்பா.

''நல்லூரடிக்குப் போறியா...''

''முகாமுக்குப் போறன்... அங்கை போனப்பிறகுதான் எங்களுக்குரிய பொறுப்புகளைத் தருவினம்...''

''ஆர் தாறது...''

'...எங்கடை தலைமைத் தோழர்...''

'தோழர்'

இந்தச் சொல்லை என்றோ உச்சரித்து, அதை முழுமையாக உள்வாங்கி, அதன் இயல்புகளையும் பூரணமாக அனுபவித்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியமாற்றம் பெற்ற வரலாறுகளின் 'பிள்ளையார் சுழியே' இந்த தோழர் என்ற சொல்தான் என்பதை செல்லப்பா நன்கறிவார்-

"நல்லூரடியிலை பொடியள் நிப்பாங்கள் தானே"

"...போராட்டத்துக்கு ஆண்பால், பெண்பாலெண்டு இருக்கா அப்பா..."

செல்லப்பா எதுவுமே பேசாமல் நிலத்தைப் பார்த்தபடி நிற்கின்றார்.

"என்னப்பா... பேசாமல் நிக்கிறியள்..."

"...நான் என்னத்தைச் சொல்றது..."

"...அப்பா... உங்கடைமனநிலை எனக்குப் புரியாமலில்லை... எட்டுவரியத்துக்கு முன்னம் நீங்கள் வாழ்ந்து அனுபவித்த மண்ணுக்கும், இப்ப உள்ள மண்ணுக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கப்பா... பொம்புளைப்புள்ளை வெளியிலை திரிஞ்சால் பெத்ததுகளுக்கு அவமானமெண்டு யோசிக்கிறியள்... அந்தவிதமான 'தப்புக்கணக்குகள்' எப்பவோ மறைஞ்சு போச்சு..."

"சுற்றிவர இராணுவமுகாம்... நடுவிலை இராணுவத்தின்ரை உடல்களை பார்வைக்கு வைச்சிருக்கிறியள்... இராணுவம் சும்மா இருக்குமா... இராணுவத்தோடை எதிர்த்து நிக்கமுடியுமா"

"...என்னப்பா சொல்றியள்... இராணுவத்தின்ரை கட்டுக்காவல்களையெல்லாம் மீறி இராணுவத்தின்ரை உடல்களை மன்ணரிலையிருந்து கொண்டுவந்திருக்கிறம்... இராணுவத்துக்குப் பயந்து போராட்டம் நடத்தமுடியுமா..."

ஷர்மிளாவை ஆச்சரியத்தோடு பார்க்கின்றார் செல்லப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அனுபவத்தின் மூலந்தான் கற்றல்...'

''அப்பா... இராணுவத்தினர் எண்டது... உயிரைக் காப்பாற்றிக் கொள்றதுக்காக உழைக்கிறதொரு கூட்டம்...

போராளிகள் எண்டது, உயிரைத்துறந்து, உரிமையை வென்றெடுக்கிறதுக்காக உழைக்கிறதொரு கூட்டம்...'' பேசிக் கொண்டிருந்த ஷர்மிளா, திடீரென்று தனது பேச்சை நிறுத்திக்கொண்டு... செல்லப்பாவைப் பார்க்கின்றாள்... அவளது பார்வையில் வெட்க உணர்வு பளிச்சிடுகின்றது!

எட்டு வருஷங்களுக்கு முன்பே

செல்லப்பா கூட்டம் கூட்டி, புரட்சிபேசி, சிறைக்கும் சென்றவர்.. அப்படிப்பட்டவரிடம் தான் புரட்சியைப்பற்றிப் பேசியதை இப்போதுதான் ஷர்மிளா நினைத்துக்கொண்டாள்... அதை நினைத்துத்தான் அவள் வெட்கப்படுகின்றாள்.

ஷர்மிளா விடைபெறுகின்றாள்,

செல்லப்பா .. கவலையை அடக்கிக் கொள்ளத்தான்முயற்சித்தார், முடியாமல்... கண்கள் கலங்குகின்றன...

ஷர்மிளா

செல்லப்பாவின் கண்ணீரைத் துடைத்துவிடுகிறாள்... ஆனால், அவளது கண்களில் கண்ணீரில்லை!

போராளிகள் உறுதியின் உறைவிடங்கள்!

ஷர்மிளா போய்விட்டாள். இப்பகுதியிலிருந்தும் அநேகமானவர்கள் சென்றுவிட்டனர்.

இவ்வளவு மக்களும் செல்லும்போது தானும் சென்றாலென்ன என்றொரு எண்ணம் பிறக்கின்றது செல்லப்பாவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எந்த வரலாற்றிலும் இடம்பெருத சம்பவம் நமது மண் வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது. இவ்வளவு பெரிய சம்ப வத்தை... நான் மட்டும்...'

"என்ன யோசிக்கிறியள்..." ஷர்மிளா போனதன் பின் தனி மையில் இருந்து சிந்தித்த செல்லப்பாவை அவதானித்துக் கொண்டிருந்த அற்புதம் கேட்கிருள்.

'...நானும் போகலாமா எண்டு யோசிக்கிறன்'' செல்லப்பா தனது எண்ணத்தை வெளியிடுகின்ருர்

நித்தியானந்தன் என்ற வாலிபனேடு, செல்லப்பா செல்வதற் கான ஏற்பாடுகளை அற்புதம் செய்து கொடுக்கின்ருள். நித்தி யானந்தன் மிகவும் நிதானமானவன். ஆதலால்தான் செல் லப்பாவும் அவனேடு செல்வதற்குச் சம்மதித்தார்.

அற்புதம் செல்வதற்கும் செல்லப்பா அனுமதி கொடுக்கின்ருர்.

சைக்கிளில் புறப்பட்ட செல்லப்பாவும், நித்தியானந்தனும் மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவிலடியை அண்மிக்கின் றனர். செல்லப்பாவின் சிந்தனை பின்நோக்கிச் சிறகடிக்கின் றது... எட்டு வருஷங்களுக்கு முன்பு...

'பாலர் வகுப்பு' மேசைகள் அடுக்கப்பட்டு மேடையாக்கி இரண்டு பெற்ரேமாக்ஸ் வெளிச்சத்தில், பத்தோ பதினைந்து பேருடன்... அரசாங்கத்திற்கெதிராகப் பேசி... கைது செய் யப்பட்டு......'

அதேமண்ணில்... இப்போது எவ்வளவு மாற்றங்கள்... செல் லப்பாவின் மனதில் கட்டவிழ்ந்த புதிய சிந்தனை மொட்டில் சிறுகச் சிறுக இதழ்கள் விரிகின்றன.

ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம் என்பவைகளைத் தாண்டி, தட்டாதெருச் சந்தியை அண்மிக்கின்றனர்... அதற்கப்பால் சைக்கிளில் செல்ல முடியாதென்ற முடிவுக்கு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவு சனத்தொகை. வீதியிலுள்ள தாரின் கறுப்பை மறைத்து, மனித தலைகளின் கறுப்பு மிதந்து தெரிகின்றது.

''நித்தி...'' நித்தியானந்தனை அயலவர்கள் நித்தி என்று சுருக்கமாக அழைப்பார்கள்.

''என்னண்ணை...''

''கவனமாய் நிக்கவேணும்''

''ஏன்''

''ஏதாலும் பிரச்சினை வரும்''

''என்ன பிரச்சினை வாறது''

''சிலவேளை ஆமிக்காறர் வந்திட்டால்''

''அப்படி ஒண்டும் நடக்காது''

''ஏன் அப்பிடிச் சொல்லுருய்...''

''இதுக்கு முன்னமும் இப்படிச் சம்பவங்கள் நடந்திருக்கு...''

''என்ன நடந்தது...'' பெரும் சனக்கூட்டத்திற்கு மத்தியில் தான் நிற்கிறேன் என்பதை மறந்து, நடுரோட்டில் நிற்கிருர் செல்லப்பா. அவ்வளவு ஆச்சரியம் அவருக்கு!

''ஆறுதலாய் சொல்றன்.. பேசாமல் வாருங்கோ'' நித்தியானந்தன், செல்லப்பாவின் கையைப்பிடித்து இழுக்கின்ருன்.

''இப்ப சொல்லு...''

''அது எவ்வளவு பெரியவிஷயம்... அமைச்சர்கள் கண்ணீர் விட்டு, கெஞ்சின விஷயம்...... நடுரோட்டிலை நிண்டு எப்பிடிச் சொல்றது...''

''விபரங்களைப் பிறகு சொல்லு... இப்ப சம்பவங்களை மட்டும் சொல்லு...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பாவின் மனநிலையைப் புரிந்துகொண்ட நித்தியானந்த னால், செல்லப்பாவின் வேண்டுகோளை நிராகரிக்கமுடியாமயல் இருக்கின்றது.

''...வெளிநாட்டுக்காறத் தம்பதிகளைக் கடத்தி வைச்சிருந்தார்கள்...

அமைச்சர்களின் கண்ணீர் றேடியோவுக்காலையும், ரி. வியுக் காலையும் வழிஞ்சுது...

...சிங்கள பொலிஸ் அதிகாரிகள் இருவரைக் கடத்தினார்கள்...

...சிங்கள உளவாளர்கள் சிலரைக் கடத்தினார்கள்...

...மத்திய உளவுப்படையைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் கடத் தினார்கள்...''

...இப்படி எத்தனையோ கடத்தல் சம்பவங்கள் நடந்திருக்கு...

சர்வதேச அரங்கில் நம்மவர்களின் போராட்டம் பேசப்பட் டிருப்பதை செல்லப்பா உணர்கிறார்.

சிறைச்சாலையில் இருக்கும்போது இச்சம்பவங்கள் பற்றி, தான் கேள்விப்பட்டிருந்தவைகளை இப்போது நினைத்துக்கொள்கிறார்.

சர்வதேச அரங்கில், கூறப்படுகின்ற விடுதலைப் போராளிக ளோடு, நம்மவர்களையும் மனத்துக்குள் ஒப்பீடு செய்கிறார் செல்லப்பா...

அவரின் மனத்துள் கட்டவிழ்ந்த புதிய உணர்வு மொட்டில், ஒரு இதழ் பூரணமாக விரிகின்றது.

''இந்தக் கடத்தல் வரிசையில்... இன்று நேரடி மோதலில் எதிரிகளைப் பிணங்களாகவும், உயிருடனும் கொண்டுவந்திருக் கின்றனர்...''

செல்லப்பாவும், நித்தியானந்தனும் நடந்துகொண்டிருக்கின்ற னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர்மடம் சந்தி...

"அண்ணை... அங்கை பாருங்கோ..." நித்தியானந்தன் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டுகிறான். அங்கே —

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் செல்லப்பா சந்தித்தாரே...

அதே கோலத்தில் பத்தோ பதினைந்து பொடியள்...

மண்மீட்புப்பணிக்கு தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்கள்...

நெஞ்சை நிமிர்த்தி அவர்கள் நிற்கின்ற கோலம்...

...இரும்புத்துண்டைக்கூட கடித்துத் துண்டாக்கிவிடுவார்கள்...!

"நித்தி..."

"என்னண்ணை..."

"கொஞ்சநேரம் நிண்டு பொடியளைப் பாப்பமா..."

"என்னத்தைப் பாக்கப்போறியள்..."

"...எங்கடை பொடியள் அவங்கடை துணிவு... தியாகம்..."

"இனிமேல் இஞ்சைதானே நிக்கப் போறியள்... அடிக்கடி பாக்கலாம்..."

நித்தியானந்தனோடு, இரண்டடி முன்னோக்கி எடுத்துவைத்த செல்லப்பா திடீரென்று நின்று பின்னால் திரும்பி அந்த வாலிபர்களைப் பார்க்கின்றார்...

அவர்களின் கழுத்துக்களில்—

கறுத்தக் கயிறுகளில், அதே மரணக்கூடுகள்!

இராணுவம் எண்டது, உயிரைக் காப்பாற்றிக்கொள்ள உழைக்கிறதொரு கூட்டம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராளியன் எண்டது உயிரைத் துறந்து உரிமைக்காக, உழைக்கிறதொரு கூட்டம்.........

வீட்டில் ஷர்மிளா அவருக்குக் கூறியதை இப்போது நினைத்துக் கொள்கிறார்.

"நித்தி..."

"என்னண்ணை..."

'பொடியளோடை எப்பிடிச் சேர்றது"

"ஏன் சேரப்போறீங்களா..."

செல்லப்பா அமைதியாகச் சிரிக்கின்றார்.

# 9

நல்லூர் கோவிலின் பின் வீதி.

கிட்டத்தட்ட இருபதடி நீளமான தகரக் கொட்டில்; அதற்குள் ஒன்பது இராணுவத்தினர்களின் உடல்கள்...

உயிரோடு பிடிக்கப்பட்ட இரண்டு இராணுவத்தினர். பல ஆயுதங்கள்.

செல்லப்பாவின் நாம்புகளுக்குள். அடுப்பில் கொதித்துக் கொண்டிருக்கும் இறைச்சிக் குழம்புபோல... இரத்தம் கொதித்து.. கொப்புளங்களாய் வெடித்துச் சிதறுகின்றது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியின் அடித்தளத்தில் படிந்திருந்த சங்கிலிய மன்னனின் பாதச்சுவடுகள் பட்ட மண்துகள்கள், பூமியைப் பிளந்து கொண்டு மேல்நோக்கி வருவதைப்போன்றதொரு உணர்வு...

எத்தனையாயிரம் மக்கள்...

திடீரென வானத்திலே இரண்டு ஹெலிகப்டர்கள்... வட்ட மிடுகின்றன....

ஒருவர்கூட நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை...!

எட்டு வருஷங்களுக்கு முன் செல்லப்பாவைக் கைது செய்ய வந்த ஒரு ஜீப்பையும், பத்துப் பொலிசாரையும் கண்டு அயலவர்கள்: பருந்தைக் கண்ட கோழிக்குஞ்சுகள் தாய்க்கோழியின் இறக்கைகளுக்குள் மறைந்துகொள்வதைப் போல்; ஓடி மறைந்து கொண்ட காட்சிகள் இப்போதும் மன தில் ஒட்டிப்போய்க் கிடக்கின்றன...

அட்டடுறிக்குகளிலும், சூரியனையே சுட்டுவீழ்த்திவிடக் கூடிய நீண்ட இரும்புக்குழல்கள்... அவற்றை எந்த நிமிடமும் இயக்கத் தயாராக நிற்கின்ற பொடியள்...

"நித்தி..."

"என்னண்ணை..."

"... நான் எட்டு வரியந்தான் மறியலிலை இருந்தனான்...

இனிமேல் எண்பது வரியங்கூட இருக்க என்னாலை முடியும்..."

பெருமிதத்தோடு செல்லப்பா கூறுகிறார். நித்தியானந்தன் ஆச்சரியத்தோடு, செல்லப்பாவைப் பார்க்கிறான்.

'உலகத்திலை உள்ள மக்களிலை, இப்படியொருகாட்சியை எங்கடை ஆட்கள்தான் காணுகினம்... இந்தக் காட்சியைப் பார்த்த சந்தோஷத்தோடை எண்பது வருஷமென்ன எண் ணூறு வருஷங்கள் சிறையிலை இருக்கலாம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பா தன்னை மறந்து நிற்கிறார்.

"அண்ணை..." பின்பக்கமாக ஒருவரின் அழைப்பொலி கேட்டு, செல்லப்பா திரும்புகிறார் - ஒரேஒரு விநாடிதான், குரலுக்குரிய வரை இனங்கண்டு கொள்கிறார்.

"தம்பி... நீ... சந்திரன்தானே..."

செல்லப்பாவின் ஊகிப்பை ஆமோதிப்பதுபோல் மௌனமாகச் சிரிக்கிறான் சந்திரன்.

"சந்திரன், உன்னை என்னலை மறக்கமுடியுமா..." நன்றியுணர் வோடு கூறுகிறார் செல்லப்பா.

எட்டு வருஷங்களுக்கு முன், செல்லப்பா மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலடியில் கூட்டம் நடத்தியபோது பக்கத்தி லுள்ள பாடசாலையிலிருந்து 'பாலர் வகுப்பு' மேசைகள் கொண்டுவந்ததும், இரண்டு 'பெற்றோ மாக்ஸ்' தேடி எடுத்துக் கொண்டு வந்ததும் சந்திரன்தான்.

அப்போது சந்திரனுக்கு இருபது வயது.

செல்லப்பா கைது செய்யப்பட்டதோடு, சந்திரன் சில தினங் கள் தலைமறைவாய் இருந்தான்.

"நீங்கள் சிறையிலிருந்து வந்ததாய் கேள்விப்பட்டன்... வந்து சந்திக்க நேரமில்லாமல் போச்சுது..."

"...நான்கூட உன்னைப் பார்க்க வேணுமெண்டு நினைச்சன்... அதுசரி இப்ப என்ன செய்கிறாய்..." இப்படிக் கேட்ட செல் லப்பா, தற்செயலாக சந்திரனின் கழுத்தைப் பார்க்கின்றார்.

அதே கறுத்தகயிறு;

அதே மரணக் கூடு...!

செல்லப்பா தன்னைப் புரிந்துகொண்டுவிட்டதை சந்திரனும் உணர்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அண்ணை...''

''என்ன சந்திரன்...''

'ஒவ்வொரு பகுதியிலை இருந்தும், ஒவ்வொருதர் பேசிறதுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கிறம் மானிப்பாய் பகுதியிலிருந்து நீங்கள் பேசவேணும்...''

நல்லூர் பின்வீதி, வலதுபக்க மூலையில், ஒரு வாகனத்தில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டிருக்கின்றது. பின் சீற்றிலிருந்து ஒருவர் பேசிக்கொண்டிருக்கின்றார்.

தமிழ்மக்கள்; அவர்களது போராட்டம், போராட்டச் சம்பவங்களில் முக்கியமானவர்கள், இனிமேல் நாம் செய்யவேண்டியவை என்ற அடிப்படையிலேயே பேச்சுத் தொடர்கின்றது.

''...ஒரு முறை பேசி... எட்டு வருஷம் மறியல்...'' செல்லப்பா சிரித்தபடி கூறுகிறார்.

''... அது எட்டுவரியத்துக்கு முன்னம்... இப்ப துணிவாய் பேசலாம்...''

''நான் பேசுறதுக்கு என்ன இருக்குச் சந்திரன்...'' அர்த்த புஷ்டியாகக் கேட்கிறார் செல்லப்பா.

''பேசுறதுக்கு எவ்வளவோ இருக்கு...''

செல்லப்பாவின் மனம், பின்னோக்கிச் சிறகடித்து, மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலுக்கும், நல்லூர் பின்வீதிக்குமிடையே ஒரு பாலத்தை ஏற்படுத்துகின்றது...

அன்று... மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோவில் முன்றலில்... ஒரு சில மக்களோடு... முடிவில் கைது செய்யப்பட்டு...

இன்று— உணர்ச்சிவசப்பட்டு நிற்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள்

பட்டமரங்களாகிவிட்ட காவல் படையினர்... காணுமிடமெல்லாம் போராளிகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பாவின் சிந்தனை, பாலத்தின் இரு முனைகளையும் தொட்டு வருகின்றது. அவரது மனத்தில் பெரும் திருப்தி.

செல்லப்பா பேசுவதற்காக ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனத்தை நோக்கிச் செல்கிறார்.

'மைக்' கைமாறுகின்றது... அவரின் கைகள் நடுங்கி... கண்களில் கண்ணீர் பனிக்கின்றது... அவரது நாக்குப் புரளமறுக்கின்றது... வார்த்தைகள் மனத்துக்குள்ளேயே குமைந்து...

''அண்ணை... பேசுங்கோ...'' சந்திரன் செல்லப்பாவை உற்சாசப்படுத்தினன்.

அன்று, அடிமைத்தனமாக, பயந்துபோயிருந்த மக்களைப் பார்த்து மனதுக்குள் அழுதுகொண்டவர்...

இன்று, அதேமக்களின் விடுதலை உணர்வைக்கண்டு... ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றார்...

''... ஆறுகள் மலையின் உச்சியில் ஊற்றெடுப்பதுபோல்,...

மனித அனுபவத்தொகுப்பின் கூர்மையிலிருந்து புரட்சி ஆறு ஊற்றெடுக்கின்றது... ஊற்றுக்கண்ணிலிருந்து பிரசவமாகும் ஆறு, திரும்பவும் ஊற்றுக்கண்ணை நோக்கித் திருப்புவதில்லை...

அதேபோல......

அனுபவக் கூர்மையிலிருந்து பிரசவமாகும் புரட்சி ஆறுகள் என்றும் பின்நோக்கித் திரும்பியதில்லை...... புரட்சியின் வரலாற்றுப் பாதையில் மிகப் பெரியதொரு அத்தியாயம் இன்று வரையப்பட்டுள்ளது... ''தொடர்ந்து அவரால் பேசமுடியவில்லை...

வானத்தில்—

நான்கு 'பொம்பர்', மூன்று 'ஹெலிகள்' வட்டமிடுகின்றன...

ஆனல்,...... மக்கள் [illegible] நிற்கின்றனர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசொலி
# பரிசுக்
# குறுநாவல்கள்

★ தாமரைச் செல்வியின்
**வேள்வித் தீ**

★ கோகிலா மகேந்திரனின்
**முகங்கள் உணர்வுகள்**

★ ஜனகமகள் சிவஞானத்தின்
**விடைகளே விடுகதையானால்...**

முரசொலி
வெளியீடாக
வெளிவரவுள்ளன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குறுநாவல்...

உணர்ச்சி நரம்புகள் புடைத்து, வெடித்து இரத்தம் கொப்பளிக்கும் இன்றைய சமுதாய நிகழ்வுகளை மையமாகக் கொண்டே இக் குறுநாவல் எழுதப்பட்டது.

அண்மைக்காலத்தில் நமது மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், அந்த மாற்றங்களின் சில நிகழ்வுகளையுமே இங்கு கூறியுள்ளேன்.

கூறப்பட்டவைகள் நிகழ்வுகளே தவிர முடிவுகளல்ல!

குறுநாவலில் முழுமையான நிகழ்வுகளையோ முடிவுகளையோ கூறி விடவும் முடியாது.

சமுதாய நிலையில் இன்று இருப்பதைவிட, நிதானமும், உறுதியும் ஏற்பட வேண்டுமென்ற ஆர்வத்தினாலும், இன்றைய நிகழ்வுகள் எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்ற ஆவலினாலுமே இக்குறுநாவலை எழுதினேன்.

சகல மக்களும் பங்காளர்களாகி நிற்பதால், இக் குறுநாவல் பூரணமானதொரு விமர்சனத்தைப் பெறுமென்று நினைக்கிறேன் 'சாணைக்கல்' போன்ற விமர்சனங்கள் நிச்சயமாக என்னைக் கூர்மைப் படுத்தும்.

இக்குறுநாவலின் பிறப்பிலும், வளர்ச்சியிலும் முக்கிய பங்கு கொண்ட முரசொலி பிரதம ஆசிரியருக்கும், முரசொலி அச்சகப் பகுதியினருக்கும் எனது நன்றிகள்.

அன்புடன்

கே. ஆர். டேவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org